திசை
THISAI

**BOOKS AND MAGAZINES**

Wanted by Foreign Research Organisation books, magazines and pamphlets on all subjects pertaining to Sri Lanka.

Preference for publications in English published before 1948. Immediate payment. Please write in English giving details including name of author, year of publication and price expected to–

**ZODIAC ENTERPRISES LTD.**
227D, Galle Road, Colombo - 3 A 007

திசை 1 25-3-1989 சனிக்கிழமை விலை : ரூபா 3-50 முகம் 11

இலங்கை

# 'குருஷேத்ரம்' ஆகும் நிலை உருவாகிக்கொண்டு வருகின்றது

**சொர்க்கமாக விளங்கிய இலங்கைத்தீவு இன்று நரகமாக மாறிவருகின்றது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணங்கள் என்ன?**

56 ஆம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டத்திலிருந்தே இந்தத் தீவு தலைகீழாக மாறியது.

குறிப்பாக 83 இலிருந்து தமிழ்ப் போராளிகள் நடாத்திய போராட்டத்தின் விளைவாக, தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை முனைப்புப் பெற்றமை தெரிந்ததே.

56ஆம் ஆண்டிலிருந்து தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட தாக்குதல்கள் 1958 இலும், 1977இலும், 1983 இலும் மும்முரம் பெற்றன.

இதன் விளைவாக சர்வதேச ரீதியாக இலங்கைக்கு—குறிப்பாக சிங்கள மக்களுக்கு — எதிரான கருத்துக்கள் உருவாகின.

1956,58 இல் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அரசு சார்பு குண்டர்கள் நடவடிக்கைகள்தான், 1971 இல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு இராணுவம்

இலங்கையில் நிலவும் வன்செயலுக்கும் குழப்பங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக வெளிநாட்டுப் படைகளை இங்கு வரவழைக்க வேண்டும் என்பதில் பலவித கருத்துக்கள் அடிபடுகின்றன. இந்திய அரசு, தன் செல்வாக்கின் கீழ் இருக்கும் சார்க் நாடுகளின் படையைக் கொண்டு வரவேண்டும் என்பதில் அக்கறைகாட்டுகிறது. மா கா ண அரசில் அமைச்சராய் இருந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் மணல்குண்டு ஏழை முஸ்லிம்களின் குடிசைகளை எரித்தவர்கள் யார்?

கடந்த வாரம் புத்தளம் மணல்குண்டு என்னும் இடத்தில் வசிக்கும் ஏழை முஸ்லிம் மக்களின் 193 குடிசைகள் சீருடையில் வந்தோரால் எரிக்கப்பட்டது தெரிந்ததே.

இது பற்றி முதலில் மறுத்த பாதுகாப்பு அமைச்சர், பின்னர் அவ்விடத்துக்குச் சென்று மாநாடு கூட்டி, குற்றஞ் செய்தவர்கள் யாரென்று நிரூபிக்கப்பட்டால் தண்டனை வழங்கப்படும் என அறிவித்த வேடிக்கையும் தெரிந்ததே.

கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையா ? மாநாடு தேவையா ?

ஆனால் இந்நிகழ்ச்சிகள் எமக்கு எதைக்காட்டுகின்றன?

இது மணல்குண்டு முஸ்லிம்களோடு முடிந்து போகும் விவகாரமல்ல. இன்று மணல்குண்டு முஸ்லிம்கள். நாளை மதவாச்சியிலுள்ளவர்கள். இன்னொருநாள் மட்டக்களப்பு. வேறொரு நாள் யாழ்ப்பாணம் என்று இது பரவிக் கொண்டுதான் இருக்கப் போகிறது.

இதற்கு முன்னரும் புத்தளத்தில் 1976இல் பள்ளிவாசலில் அனர்த்தங்கள் நிகழ்ந்தபோது அரசாங்கத் தரப்பில் அமர்ந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மேற்கோள்களும் துப்பாக்கிகளும்

1971 கிளர்ச்சியின்போது கைதுசெய்யப்பட்ட ஜே.வி.பி.யினர் ஊர்காவற்துறை கோட்டையில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு வாசிப்பதற்கு நூல்கள் தேவைப்பட்டன. இதை அவர்கள் அங்கிருந்த இராணுவ அதிகாரியிடம் முறையிடவே, அவர் அவர்களுக்குத் தேவையான புத்தகங்களை குறித்துத் தரும்படி கேட்டார். அவர்கள் குறித்துக் கொடுத்த புத்தகங்களில் ஒன்று மாவோவினுடைய மேற்கோள்களாகும்.

"மாவோவுடைய மேற்கோள்கள்!" என்று கூறிவிட்டு அந்த அதிகாரி சிரித்தாராம்.

"அதில் என்ன சிரிக்க இருக்கிறது?" என்று இளைஞர்கள் கேட்டபோது, அந்த அதிகாரி, "உங்களுக்கு மாவோ தந்தது வெறும் மேற்கோள்கள். எங்களுக்கு அவர் தந்தது இந்த ஆயுதங்கள்!" என்று கூறி தனது கையிலிருந்த ஆயுதத்தை தொட்டுக் காட்டி மீண்டும் சிரித்தாராம்.

## திசைமுகம்

*"சுதந்திர ஒளியினில் மனங்குளிர்*
*அதன் வழி திசையெலாம் துலங்கவே"*

### அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம்கள்

*புத்தளத்திலுள்ள மணல்குண்டு எனும் பகுதியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 193 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.*

*எந்தவித மனிதாபிமானமும் அற்றமுறையில் அரசாங்க அதிபரின் கட்டளையின் பேரில், சீருடையில் வந்தவர்களே இந்த வன்செயலைப் புரிந்துள்ளதாக செய்திகள் அறிவிக்கின்றன.*

*இவ்விடத்திற்கு நேரடியாக விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின, அவ்விடத்துக்குச் சென்று பார்வையிட்டதோடு மகாநாடு ஒன்றையும் கூட்டிய பின்னர், விடுத்துள்ள அறிவிப்புத்தான் இன்னும் வேடிக்கையானது. அதாவது "இந்த வன்செயலைச் செய்தவர்கள் யார் என்று நிரூபிக்கப்படுவார்களானால் அவர்கள் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவார்கள்" என்பதே அவரது அறிவிப்பு !*

*அரசாங்கமே கதாநாயகனாகவும் இயங்குகிறது: வில்லனாகவும் இயங்குகிறது.*

*பச்சைப்புலியும் நான்தான் : பாதுகாப்பு அமைச்சும் நான்தான் — கரும்பூனையும் நான்தான்: கடுவனும் நான்தான் என்று ஒருவரே இரட்டை வேடம் ஆடும் போது, யார் யாரை நிரூபிப்பது ? யார் யாரைக் கைது செய்வது ?*

*ஆனால் பிரச்சினை இதுவல்ல. பிரச்சினை இதை விட முக்கியமானது. இன்று அகதிகளாக்கப்பட்டுள்ளவர் முஸ்லிம் சமூகத்தவர்.*

*பேரினவாதம் எந்தச் சிறுபான்மை இனத்தையும் விட்டுவைக்காது என்பதற்கு, இது தக்க உதாரணம்.*

*தேர்தல் முடியும் வரைதான், தேசியமும் ஐக்கியமும். தேர்தல் முடிந்தபின் நான் ஆள்பவன் நீ அடிமை. தமிழ் பேசும் இனத்தவராகிய நாங்கள் இதிலிருந்து, எமது வழிகளைத் தெளிவுபடுத்துவதில் ஒன்றிணைந்து நிற்கவேண்டும, என்பது நிச்சயமாகிறது.*

'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

திசை

ஆசிரியர்: மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்: (உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 200/-
அரைவருடம்-ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 300/- (இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் - யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் - யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு, த. பெ. 122, யாழ்ப்பாணம்.

பத்திரிகை விடயதானம், ஆசிரியர் தொடர்பு முகவரி: 267, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# சிவராத்திரி, ஒரு வெற்றுச் சடங்காகிவிட்டது!

ஆசிரியர்,
திசை.

4-3-89 'திசை' கண்டேன். அதிலே கண்ட செய்தி ஒன்று சற்றே என்னை மனந்தளரச் செய்தது. 'சிவராத்திரி நினைவாக' — என்பது பண்டிகைகள் பற்றி பத்தி பத்தியாக எழுத பத்திரிகை உலகில் பல உண்டு. திசையில் நாங்கள் வித்தியாசமான செய்தி விமர்சனங்களையும், வேறு பயனுள்ள ஆக்கங்களையும் படித்து வந்திருக்கிறோம். எல்லாவற்றுக்கும் திருஷ்டி கழிப்பதுபோல சிவராத்திரி பற்றிய குறிப்புக்கள்!

இன்று சிவராத்திரி என்பது சைவர்களுக்கு 'கண் முழித்திருக்கும்' ஒரு வெற்றுச் சடங்காகி விட்டது. சிவராத்திரி பலரால் அவராத்திரியாகவே கழிக்கப்படுகின்றது. விடியும் வரை சினிமா — அதுவும் மோசமானவை — பார்ப்பது, பொழுதை அவமாக வேறுபட்ட வழிகளில் நித்திரை 'முழித்துக்' கழிப்பது என்பன இன்று ஒரு வழக்கமாகிவிட்டது. பல ஆலயங்களும் இதற்கு விலக்கற்றவையாகி விட்டன. சிவராத்திரியன்று பல சைவ ஆலயங்கள் திகர் வீடியோ சினிமா காட்சியகங்களாக மாறிவிடும் கொடுமைகள் இங்கு. இப்படி அவமாக நித்திரை விழிப்பதைவிட்டு ஒருவன் அமைதியாக நித்திரை கொள்வது மேலானதல்லவா?

ஆத்மீகம் என்பதை வெற்று ஆசாரச் சடங்குகளுக்குள் திணித்துக் காண்பதைப் பலர் வழக்கமாகக் கொண்ட நிலையில் ஆலயங்கள் 'வீடியோ சென்ரர்'களாக மாறிவிட்ட சூழ்நிலையில் சமூகத்துக்குள்ளும், சமூகத்தின் அங்கங்களான மனிதர் ஒவ்வொருவருக்குள்ளும் கடவுளை எழுந்தருளப் பண்ண வேண்டிய அகப் பயிற்சி அவசியமான நிலை எமக்கு, இதற்கு நித்திய அகவிழிப்பே அவசியம். அகவிழிப்பில்லாத புறத்தின் பொய்மை, போலிமைகளில் கண்விழித்து அகத்தை அழுக வைப்பதில் என்ன பிரயோசனம்?

செ. ஈஸ்வரமூர்த்தி
வேலணை.

தேடல் விழைவோருக்கும், கனமான செய்திப் பிரியர்களுக்கும் 'திசை' காத்திரமான பணி செய்ய முற்பட்டிருப்பதையிட்டு மகிழ்ச்சி.

தேர்ந்தெடுத்த தமிழில் ஆக்கங்கள் கோவை செய்யப்பட்டு வருவது நல்ல பணி.

ஏனைய வடபகுதி ஏடுகளைப் போல் அங்கேயே வட்டமமைத்துக் கொள்ளாமல், பரந்து வாழும் தமிழன்பர்களிடமெல்லாம் 'திசை' ஊடுருவிச் செல்ல வேண்டுமென்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

க. பொன்னம்பலம்
29, மன்னார் வீதி புத்தளம்.

'நான் பாவி, நான் பாவி, நான் பெரும் பாவி' எனக் கத்தோலிக்கர்கள் தம்மைத் தாமே குற்றஞ்சாட்டும் பாணியில், கொழும்பிலே பிரபலமான கத்தோலிக்க கல்லூரியான சென். ஜோசேப் கல்லூரியில் கல்வி பயின்ற புதிய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, தான் கல்வி பயின்ற கல்லூரி



யளித்த வரவேற்பில் பேசுகையில், இனங்களுக்கிடையே இன்று நல்லுறவுகள் சீர்குலைந்திருப்பது தமது தலைமுறை செய்த பாவச் செயல் என்பதை, ஒப்புக்கொண்டுள்ளார்.

கண்டி யாத்திரைக்குத் தலைமை தாங்கி, நிலைமையை மோசமாக்கி, தமிழ்—சிங்கள உறவுகளுக்கு ஆப்பு வைத்து, இன்று இலங்கையை இந்த நிலைக்கு தள்ளிவிட்டு பதவியிலிருந்து ஓய்வு பெற்ற அவரது தலைவரான பழைய ஜனாதிபதியின் 'பாவசங்கீர்த்தனத்தினை' கேட்கும் 'பாக்கியம்' தமிழர்களுக்கு எப்பொழுது கிடைக்குமோ?

— அன்ரன் ஜுட்
கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆசிரியர்;
திசை

திசையின் வெளிவந்த 5 இதழ்களையும் சுவைத்தேன். எம் போன்ற நபர்களுக்கு Saturday Review இன் இடத்தை பூர்த்திசெய்ய வந்த ஒரே பத்திரிகை 'திசை' என்றால் மிகையாகாது. ரஞ்சகுமார் எழுதும் 'ஆட்கொல்லி' 'சீதனம் ஒரு சமூக அநீதி' போன்றவை சென்ற இதழில் என் நெஞ்சைக் கவர்ந்தவை.

சனி கிடைக்கும் வண்ணம் அனுப்பமுடியாதா?

ராஜன்
நீர்கொழும்பு.

ஆசிரியர்,
திசை

வாரா வாரம் நல்லிதழ் ஒன்றைப் பார்க்கலாம் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளீர்கள். தொடரட்டும் உங்கள் பணி. நவீன ஓவியங்கள், புதிய பார்வைகள் கொண்ட விடயங்கள் நிறைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. சினிமா என்ற சிறப்பான (தொடர்பு சாதனத்தை) கலைவடிவத்தை அனைவரும் புரிந்து கொள்ள மேலும் மேலும் அவை பற்றிய கட்டுரைகளைத் தாருங்கள். சமூகத்தின் பார்க்கப்படாத திசைகளிலிருந்து 'திசை'யைத் தோற்றுவியுங்கள். தோள் கொடுப்போம்.

ஜீவன்
சண்டிலிப்பாய்.

## வாக்களிக்கும் சுதந்திரமும் தீர்மானிக்கும் சுதந்திரமும்

வாக்களிப்போர் தொகையில் 50.1 வீதத்தினர் பெண்களாக இருந்தும், பொது வாழ்வைப் பொறுத்தவரை, 50 வீதமாவது தீர்மானிக்கும் சுதந்திரம் உண்டா?

இக் கேள்வியே, சர்வதேச பெண்கள் தினத்தையிட்டு (மார்ச் 8 ஆம் திகதி) பெண்கள் செயற்குழுவினரால் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில், பிரதானமாக முன்வைக்கப்பட்டது.

இங்கு வட - கிழக்கில் பாதிக்கப்பட்ட இடங்களின் புகைப் படங்களின் மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

## உயர்ச்சி

யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் 'சென்றி பொயின்ற்' களில், அரைப்பனை உயரத்துக்கு அரண்கள் கட்டியெழுப்பப்படுகின்றன.

மீண்டும் ஓர் 'சூறாவளி' அடிக்கப்போகிறதோ எனப் பொது மக்கள் அஞ்சுகின்றனர்.

# தேர்தல்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பகிஷ்கரிப்பைப் பற்றி பல விதமான கருத்துகள் பிற்காலத்தில் தெரிவிக்கப்பட்டன. அதன் உண்மையான நோக்கம் மறைக்கப்பட்டு, தமிழினத்துக்கான பிரதிநிதித்துவத்தில் ஏற்பட்ட குறைபாடுகளே பகிஷ்கரிப்பின் உள்நோக்கமெனவும் தெரிவிக்கப்பட்டதும் சில சிங்களப் பிரமுகர்களும், ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களும் இத்தகைய விளக்கங்களைத் தெரிவித்தனர். இளைஞர் கொங்கிரஸ் தான் வெளியிட்ட வகுப்புவாதமா அல்லது தேசியவாதமா? (Communalism or Nationalism? — 1939) என்ற நூலின் மூலம், மேற்குறித்த கருத்துக்களை மறுத்து உண்மைநிலையை விளக்கியது.

பகிஷ்கரிப்பு உரிய வெற்றியைப் பெறாமல் விட்டதற்கு சிங்கள மக்களிடையே அதற்கு ஆதரவு இல்லாமலிருந்ததே அதற்கு முக்கிய காரணம். தென்பகுதியில் யாழ்.இளைஞர் கொங்கிரசுக்கு ஒத்த அமைப்புகள் எதுவும் அப்போது இருக்கவில்லை. இடதுசாரி இயக்கங்கள் பின்பே தோன்றி, காலப்போக்கில் அவையும் சிங்களப் பேரினவாதத்துக்கு ஒத்துப்பாடுபவையாக மாறியிருப்பதனைக் காணலாம்.

யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் துன்பங்கள் எல்லாவற்றிற்கும் இந்தப் பகிஷ்கரிப்பே காரணமெனக் கூறுவோருமுளர். எதிர்பார்த்த பெரிய வெற்றியை அது தரவில்லையாயினும், மக்களை விழித்தெழச் செய்வதில் அது உதவியுள்ளதென்றும், பகிஷ்கரிப்பைக் கைவிட்டு அரசாங்க சபைக்குச் சென்றவர்கள் சாதித்தது என்ன? என்றும் ஹன்டி குறிப்பிட்டுள்ளார். நாமும் நமது கடந்த அறுபது ஆண்டுகால அரசியலையும், அதன் விளைவாக தற்போதிருக்கும் நமது நிலையையும் எண்ணிப் பார்க்கலாம்.

ஹன்டி யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். பின்பு கொக்குவில் இந்துக் கல்லூரியில், பதினெரு ஆண்டுகளாக அதிபராகப் பணிசெய்தார். அகில இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவராகவும் பின்பு, தேசியக் கல்வி விசாரணைக் குழு உறுப்பினராகவும் பணிபுரிந்தவர். அவரின் சிறப்பு மிகுந்த கல்விப் பணிகள் தனியாக ஆராயப்பட வேண்டியவை; அது பற்றிப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

அவருடைய வாழ்க்கையை முழுமையாகப் பார்க்கும்போது, அவர் தாம் உண்மையென்றும் உயர்ந்ததென்றும் கண்டவற்றுக்காக வாழ்ந்தவராக விளங்குகிறார். தமது சத்திய தரிசனத்துக்கு அவர் எப்போதும் துரோகமிழைக்கவில்லை. "எனது மனச்சான்று எனக்கு வழிகாட்டியாக இருந்ததே தவிர எனது குற்றங்களுக்கு கூட்டாளியாகவல்ல" என்று, அவரே தெளிவுபடுத்தியுள்ளார். அவருக்கு உன்னத இலட்சியங்கள்தான் முக்கியம். பதவி, அதிகாரம், புகழ் என்பவை பெரிதல்ல. இங்ஙனம் தன்னலமறுப்புடன் உண்மையைத் தேடுபவர்களுக்கு ஆன்மீக நாட்டம் ஏற்படுவது வெகு இயல்பானதே" ......சமய உண்மைகளை ஆராய்வதில் ஈடுபடுத்தியது. இந்நிலையில் தூங்குவோன் கையில் பொருள்கள் போல அரசியற் கொள்கை, லௌகிகப் போக்கு யாவும் மெல்ல மெல்ல நழுவின. எந்த மூலையில் சமய சிந்தனை உள்ளவர்கள் இருந்தாலும் அங்கே சென்று மாணவர் நிலையில் தம்மை வைத்துக் கொண்டு விசாரம் செய்து வருவாராயினர். ஆத்மசிந்தனை அவரை விழுங்கி விட்டது" எனப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தருந்தது. அதிகார வேட்கை, பதவிமோகம் மிகுந்த அண்மைக்கால அரசியல்வாதிகளிடையே அவர் வேறுபட்டு நிற்கிறார். உண்மையான ஆழமான தேசவிடுதலை நாட்டமுடன் தொடங்கி, அத்தகைய சுய விடுதலை நாட்டம் கொண்டவராக முதிர்ச்சி பெற்றது, அவர் வாழ்க்கை. □



பாதுகாப்புத் தந்திரம்

# தேர்தல் பகிஷ்கரிப்பின் முன்னோடி:
# ஹன்டி பேரின்பநாயகம்

*இன்று பகிஷ்கரிப்பு, பின்பு நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பு என்றெல்லாம் பேசப்படுகின்றது. நம் நாட்டில் இதற்கு முன்னோடியாக இருந்தவர், நம்மவரான 'ஹன்டி பேரின்பநாயகம்' எனபவரே. அமரர் 'ஹன்டி'யின் 90 ஆவது ஆண்டு நிறைவு மார்ச்28 ஆம் திகதி வருவதால், அவருக்கு ஒரு நினைவஞ்சலியாக இக்கட்டுரை அமைகின்றது.*

ஒரு விளக்கு எரிகிறது என்று கூறும்போது, அதன் அடித்தண்டிலிருந்து தீப்பற்றி எரிவதனை நாம் கருதுவதில்லை. அதன் நுனியிலுள்ள திரிமட்டும் எரிவதனையே அங்ஙனம் கூறுகின்றோம். "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பதாகக் கருதி ஒரு சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்கின்றபோது, அங்கு ஒரு சில சான்றோராவது இருப்பதினாலேயே அங்ஙனம் போற்

**சுமந்திரன்**

றப்படுகிறதெனலாம். தாம் வாழ்ந்த காலத்தில் அத்தகையதொரு சான்றோராக விளங்கியவரே, திரு. ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள்.

1899 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி பிறந்த அவர் 1977 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11ஆம் திகதியன்று காலமானார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் புகழ் பெற்ற அதிபர் வண. ஜோன் பிக்னெல் அவர்களின் காலத்தில், அங்கு மாணவராகவிருந்து, பின்பு அங்கு ஆசிரியராகவும் பணிபுரிந்தார். பிக்னெல் காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியில் நிலவிய சுதந்திரமான சூழ்நிலை காரணமாக, எதனையும் சுயமாகச்சிந்தித்துத் தீர்மானம் எடுப்பவராகவும், அதன்பின் எத்தகைய எதிர்ப்புகள் வந்தபோதும் தமது கொள்கையில் உறுதியாக நிற்பவராகவும், ஹன்டி உருவாகியிருந்தார். அங்கு அவர் கற்றுக்கொண்டிருக்கும் போது நடைபெற்ற

*ஹன்டி பேரின்பநாயகம் எனது அன்புக்குரிய ஓர் இளம் நண்பராய் இருக்கிறார். அவரின்பரந்த நோக்கு, விவேகம், தேசாபிமானம் என்பவற்றால் எனது அன்பையும் பெற்றுக்கொண்டார்.*

— ராஜாஜி

சம்பவமொன்று இதனை விளக்குகிறது.

1922 ஆம் ஆண்டில் ஹன்டி பேரின்பநாயகமும் லைமன் குலோத்துங்கமும், இலண்டன் இடைநிலை கலைத்தேர்வில் (Inter arts) சித்தியடைந்தனர். யாழ்ப்பாணக்கல்லூரியிலிருந்து சித்தியடைந்த முதலிரு மாணக்கர்களாக அவர்கள் இருந்தமையினால், அதிபர் பிக்னெல், ஆண்டுப் பரிசளிப்புவிழாவில் உரையாற்றும் கௌரவத்தை அவர்களுக்கு வழங்கினார். அப்போது இந்தியாவில் நடைபெற்றுக்கொண்டிருந்த காந்தி மகாத்மாவின் போராட்டத்தால் கவரப்பட்ட ஹன்டி, தாம் தேசிய உடையில்தான் விழாவில் கலந்து கொள்வேன் எனக் கூறிவிட்டார். அதிபர் பிக்னெல் அழைத்துப் பேசியபோதும் தம் கருத்தையே வற்புறுத்தினார். அதிபர் பிக்னெல்லிடம் ஹன்டிக்குப் பெருமதிப்புண்டு. அவரைத் தமது வளர்ப்புத்தந்தையாகவே கருதியவர் அவர். எனினும், தமக்குச் சரியென்றுபட்டதை விட்டுவிட அவர் விரும்பவில்லை. இதனால் லைமன் குலோத்துங்கம் மட்டுமே, அந்த விழாவில் உரையாற்றினார். இச்சந்தர்ப்பத்தில் நம் நாடு சுதந்திரம் பெற்று, தேசிய மொழிகளே போதனாமொழிகளாக மாறி ஆண்டுகள் பலவாகிவிட்ட போதும், யாழ்ப்பாணக்கல்லூரியுட்பட பல பிரபல கல்லூரிகளில் இன்றும் பரிசளிப்பு விழாபோன்ற வைபவங்களில், ஆங்கிலமே முதன்மை பெறுவதைக் காண்கிறோம். உதாரணமாகச், சில ஆண்டுகளின் முன் யாழ்ப்பாணக்கல்லூரிப் பரிசளிப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஒரு தமிழ்த்துறைப் பேராசிரியரே, தமது சொற்பொழிவை ஆங்கிலத்தில் நிகழ்த்திய விடயத்தை, நாடு அடிமைப்பட்ட காலத்தில் வாழ்ந்த இருபத்துமூன்று வயது இளைஞரான ஹன்டியின் துணிச்சலான செயலோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது, அவரின் மகிமை விளங்கும்.

## யாழ். இளைஞர் கொங்கிரஸ்:

தேசிய உணர்வை அதிகரிக்கவும், இளைஞர்களின் ஆற்றலை சுயநலமற்ற உண்மையான தேசப்பணியில் பயன்படுத்தவும் மாணவர் கொங்கிரஸ், யாழ்ப்பாணம் (Student Congress, Jaffna) என்ற அமைப்பு 1924 இல் தொடங்கப்பட்டது. இதுவே பின்னர் யாழ்ப்பாண இளைஞர் கொங்கிரஸ் (Jaffna Youth Congress) எனப் பெயர் மாற்றம் பெற்றது. இவற்றை முன்னின்று ஆரம்பித்து நடத்தியவர், ஹன்டி பேரின்பநாயகம் அவர்களே. ஈழத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் உன்னத இலட்சியங்களுக்காகவே தொடர்ந்து போராடி, பின் உயர்ந்த பதவிகள் பட்டங்கள் பெறுவதற்காக தமது அமைப்பை இழிவுபடுத்தாமல் இருந்த இளைஞர்களின் கூட்டமாக, அது விளங்கியது. இப்போது நினைத்துப்பார்க்கும் போது இப்படியும் நடந்ததா என்ற வியப்பையும், நாம் வாழும் நூற்றாண்டிலேயே நடந்ததென்பதினால் அவசியம் மீண்டும் நிகழ்த்திக்காட்டலாமென்ற நம்பிக்கையுணர்வையும் தரும் விடயம், இது. இந்த அமைப்பின் ஆராதசுருதியாக ஹன்டி இருந்தமையால், அவரின் வாழ்க்கை உயர்ந்த இலட்சியங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டதாக இருந்தமை வெகு இயல்பானதே.

கொங்கிரசின் முதல் மகாநாடு 1924 இல் நடைபெற்றது. அம்மகாநாட்டில் ஹன்டி பேரின்பநாயகம் கொண்டு வந்த தீர்மானங்களுள் சில:

O உறுப்பினர்கள் தேசிய இலக்கியத்தைக்கற்க வாரத்தில் 3 மணிநேரம் ஒதுக்கி, அதனை ஒரு கட்டுப்பாடாகக் கொண்டொழுக வேண்டும்.

O தேசிய இலக்கியம், கலைகள், இசை போன்றவற்றிற்கு புதிய ஆக்கங்கள் மூலம் புகழ் சேர்ப்பவர்களுக்கு, பரிசும் பதக்கமும் அளித்துக்கௌரவிக்கவேண்டும்.



O ஐவர் கொண்டகுழு தெரியப்பட்டு அவர்கள் 1) அறிவியல் 2) புனைகதை 3) சமூக வரலாறு வாழ்க்கை வரலாறு போன்ற துறைகளில் புதிய ஆக்கங்களைக் கொணர்வதற்கான வழிவகைகளை ஆராய வேண்டும்.

*காந்தியின் இலங்கைப் பயணத்தில் அவரின் யாழ்ப்பாண நிகழ்ச்சிகளே மிகுந்த வெற்றிகரமாக அமைந்தவை. அதற்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் ஹன்டி பேரின்பநாயகமே.*

— மகாதேவ தேசாய்
(காந்தியின் செயலாளர்)

O உறுப்பினர்கள் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வாங்குவதின்மூலம், உள்ளூர்த்தொழில்களை ஊக்கப்படுத்தவேண்டும்.

மனமாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே மக்களிடம், உண்மையான மாற்றங்களுக்கான அடிப்படையை அமைக்கமுடியும். அதனாலேயே, கருத்துகளில் மாற்றம் கொணரும் அறிவுலக விடயங்களில் அவர் அழுத்தம் கொடுக்க விரும்பினார். அதற்கேற்பவே மேற்குறித்த தீர்மானங்கள் அமைந்தன.

*அரசியற் சரித்திரத்தில் இந்த நூற்றாண்டின் முக்காற்பங்கின் மத்திய காலம், பேரின்பநாயகம் அவர்களின் மகத்துவம் மிக்க காலமாதலை அரசியலறிஞர்கள் எடுத்துக் காட்டுவார்களாக.*

— பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

பெங்களூர் சென்று, மகாத்மா காந்தியை யாழ்ப்பாணம் வருமாறு ஹன்டி அழைத்தார். 1927 நொவெம்பர் 13 இல் கொழும்பு வந்த மகாத்மா, தென்பகுதியில் சில நிகழ்ச்சிகளில் கலந்துவிட்டு நொவெம்பர் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்தார். அக்காலத்தில் எல்லோரும் காந்தியைப்பற்றி அறிந்திருந்தனர். இந்தியாவில் அவராற்றிய பணிகளால் கவரப்பட்ட நமது இளைஞர்களும் பிறரும், சீர்திருத்தப்பணிகளில் ஈடுபடவும் விடுதலைக்காகப் பாடுபடவும் தூண்டப்பட்டனர். அவர் இங்கு வந்தபோது தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, தேசவிடுதலை, இந்து—கிறீஸ்தவ ஒற்றுமை போன்ற விடயங்களுக்கு அழுத்தம் கொடுத்துப் பேசினார். பிரபலமான கல்லூரிகள் அவருக்கு வரவேற்பளித்தன. அதன் மூலம் மாணவர்கள் அவரைக் காணவும், அவர் கருத்துகளைக் கேட்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. தலைமன்னார் வழியாக காந்தி இந்தியா திரும்பினார்.

காந்தியின் வருகையால் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையில் புத்துணர்வு ஏற்பட்டதெனலாம். அப்பெரியாரை நேரில் காணும் வாய்ப்பை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தமையால், இளைஞர் கொங்கிரசின் மதிப்பு அவர்களிடையே உயர்ந்தது. முதியவர்களும் பிறரும் இளைஞர்களின் பணியைப் பெரிதும் போற்றினர். காந்தியை மட்டுமல்லாது தீரர் சத்தியமூர்த்தி, தமிழ்த்தென்றல் திரு. வி.கலியாணசுந்தரமுதலியார், ராஜாஜி, கமலாதேவி சட்டோபாத்தியாய, ஜவஹர்லால் நேரு போன்றோரையெல்லாம் இங்கு அழைத்து அவர்களின் சொற்பொழிவுகளை மக்கள் கேட்க, இளைஞர் கொங்கிரசு வாய்ப்பு ஏற்படுத்தியது.

## தேர்தல் பகிஷ்கரிப்பு:

டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சுகளின்படி 1931 இல் அரசாங்க சபை (State Council) க்கான தேர்தல் நடக்கவிருந்தது. சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட பின் நடைபெறும் முதற் தேர்தலாக அது இருந்தது. டொனமூர்த் திட்டம் பூரண சுயராச்சியத்தை வழங்கவில்லை; வெகு குறைவான முறை என்பதினால், அதனை ஏற்றுக்கொள்ளக் கூடாதென இளைஞர் கொங்கிரசார் கருதினர். ஆதலினால் அத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென அவர்கள் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர்.

இலங்கையின் ஏனைய பகுதிகளைப் போலல்லாது யாழ்ப்பாணத்தில், இளைஞர் கொங்கிரஸ் உயிரோட்டமுள்ள மறுமலர்ச்சி இயக்கமாக விளங்கியது. அதனுடைய இலட்சியங்களின் முக்கிய ஊற்றாக காந்தியின் சுதந்திரப்போராட்டம் விளங்கியது. எனவே,

*யாழ்ப்பாணத்தின் ஒரு தலைசிறந்த மகன்... ... ... சிங்களவர்களும் தமிழர்களும், பூரண அமைதியுடனும் நட்புடனும் ஒன்றுபட்ட இலங்கையில் வாழ முடியுமென நம்பிய ஒரு விடுதலைப் போராட்ட வீரரை. முழுநாடே இழந்து விட்டது.*

— கலாநிதி என்.எம். பெரேரா

பூரண சுயராச்சியத்தைத் தவிர வேறெதனையும் ஏற்க அவர்கள் விரும்பவில்லை. இளைஞர் கொங்கிரசின் செல்வாக்கு அப்போது உச்சம் பெற்றிருந்தது. எனவே பகிஷ்கரிப்பை ஆதரித்தவர்கள் பூரண சுயராச்சியத்தை ஆதரிப்பவர்களாகவும், பகிஷ்கரிப்பை எதிர்ப்பவர்கள் பூரண சுயராச்சியத்தை எதிர்ப்பவர்களாகவும் கருதப்படும் நிலையிருந்தது. இதனால் யாரும் பகிஷ்கரிப்பை எதிர்க்க முன்வரவில்லை. தேர்தலில் போட்டியிட எண்ணியிருந்தவர்கள் வேட்புமனு தாக்கல் செய்ய முன்வரவில்லை. வடமாகாணத்தில் மன்னார் பகுதியைத் தவிர, வேறெங்கும் தெரிவு நடைபெறவில்லை. தென்பகுதியினரும் பிறரும் வியக்கும் வகையில், அமைதியான முறையில் இப் பகிஷ்கரிப்பு வெற்றிகரமாக நடைபெற்றதற்கு, ஹன்டியும் அவரது ஆதரவாளர்களுமே காரணமெனலாம்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## சாதனை புரியும் பெண்கள்




# விண்வெளியில் நீந்தும் ரச்சேல் தோமாஸ்

**வி**ண்வெளியில் நீந்தி விளையாடும் ஆண்களுக்கு சவாலாக இந்தியாவின் முதற் பெண் விண்வெளி நீச்சல் வீராங்கனையாக விளங்குகிறாள் ரச்சேல் தோமாஸ். அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஹொலண்ட், தென்கொரியா உட்பட உலகின் பல இடங்களில் 210 விண்வெளிப் பாய்ச்சல்களை செய்து காட்டியுள்ளார் ரச்சேல்.

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன் இந்தியாவுக்குள் அறிமுகப்படுத்தப்பட்ட இவ்விளையாட்டு ஒரு விமானத்திலிருந்து வெளியே பாயும் கலை- 5000 அடி உயரத்திற்குமேல் 12000 அடி உயரம் வரை சென்றபின், பரசூட்டைத் திறக்காமல், 4500 அடி உயரத்திற்கு நீந்திய பின், பரசூட்டைத் திறந்து, ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட நிலப் பரப்பில் குதிப்பது விண்வெளி நீச்சல் எனப்படும்.

இளமைப் பருவத்தைக் கல்கத்தாவில் கழித்த ரச்சேல் "இளம் வயதிலேயே வானம் என்னைக் கவர்ந்தது, மேலே பார்க்கும்போதெல்லாம் ஒரு அபூர்வ சக்தி என்னைக் கவர்வதை உணரத் தலைப்பட்டேன். முதலில் நான் ஒரு விமான ஓட்டியாக வர விரும்பினேன். ஆனால் 17 வயதில் எனக்கும் ஒரு இராணுவ வீரனுக்கும் திருமணம் நடந்தது. என் கனவுகளுக்கு முற்றுப்புள்ளியிடப்பட்டது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இரு குழந்தைகளைப் பெற்று, அவர்களைப் பேணி வளர்ப்பதில் காலம் கழிந்தது." என்று கூறுகிறாள்.

1979 இல் ரச்சேல் பத்து பாச்சல்களை வெற்றிகரமாக முடித்தாள். ஆனால் 1983 வரை, குடும்பவாழ்வில் விளைந்த பிரச்சினைகள் காரணமாக, அவளால் விளையாட்டுகளில் ஈடுபட முடியவில்லை. எனினும் அவ் விளையாட்டில் அவளுக்கு இருந்த ஆர்வம், பிரச்சினைகளை துணிவுடன் எதிர்கொண்டு, வெற்றிபெறும் வாய்ப்பை அளித்தது.

1983 இல் இந்தியா முழுவதிலும் அவள் விண்வெளிப் பாய்ச்சல்களை நடத்திக் காட்டினாள். தன் நாட்டின் பெண்கள் மத்தியில் இந்த விளையாட்டைப் பிரபலப்படுத்தும் நோக்கம் கொண்டவள் ரச்சேல்.

"பயிற்சிக் குழுவில் நான் மட்டுமே பெண் என்பதால், போகுமிடமெல்லாம் என்னைப் பற்றி பத்திரிகைகள் பெருமளவில் எழுதின. 1986 இல் புதிய நுட்பங்களையும் சிக்கலான நீச்சல்முறைகளையும் சிட்னியில் பயின்றேன். அவுஸ்திரேலிய பரசூட் பெடரேசன் என்னை அழைத்திருந்தது" என்று தன் அனுபவங்களை நினைவு கூருகிறாள் ரச்சேல்.

அவள் கணவன் ஆக்ராவுக்கு மாற்றலாகிச் சென்றபோது, அங்கே அமைந்திருந்த, இந்தியாவின் ஒரே வான் சுழியோடும் பயிற்சிப் பள்ளியில் சேரும் வாய்ப்பைப் பெற்று மகிழ்ந்தாள். வானில் நீந்தி விளையாடும் கனவு நனவானதை எண்ணி வியந்தாள். சந்தால் சிங் என்ற பிரெஞ்சுப் பிரசையும் ரச்சேலும் இந்த விளையாட்டில் ஊக்கமுடன் ஈடுபட்டனர்.

இந்தியா திரும்பியபோது ஒவ்வொரு திருப்பத்திலும் அவளுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. விண் சுழியோடுதல் கவலைதருமளவு செலவுமிக்க விளையாட்டு. தேவையேற்படும் போதெல்லாம் அவளுக்கு பணவுதவி புரிய எவரும் முன்வரவில்லை. இறுதியாக பிரதமர் ராஜீவ் காந்திக்கு தன் இலட்சியத்தையும் கவலையையும் விளக்கி ஒரு கடிதம் எழுதினாள்.

பதினைந்து நாட்களின் பின்னர், பிரதமரிடமிருந்து அவளுக்குப் பதில் கிடைத்தது. பிரதமர் தன்னை வந்து சந்திக்கும்படி அவர் எழுதிய கடிதம் கிடைத்தது. தன்னை வந்து சந்திக்கும்படி அவர் எழுதிய கடிதம் பார்த்து அவள் அதிர்ச்சியடைந்தாள்.

ஒதுக்கப்பட்ட பத்து நிமிடங்களில் அவள், தன் கபடமற்ற பேச்சினால், பிரதமரின் நம்பிக்கையைப் பெற்றாள். அமெரிக்காவின் கரோலினாவில் பயிற்சி பெற ரூபா 55,000

**வளவன்**

நிதியுதவ அனுமதித்தார், பிரதமர். இந்திய விளையாட்டு அதிகார சபை அவளுக்கு மற்றொரு தொகையைக் கொடுத்துதவியது.

கலிபோர்னியாவில் தங்கியிருந்த வேளை, சொந்தமாக பரசூட்டும் இணை கருவிகளும் 40,000 ரூபா செலவில் வாங்கிக் கொண்டாள். இந்திய தேசியக் கொடியை ஒத்த மூவர்ணம் அவள் பரசூட் கொண்டிருந்தது.

இந்தியாவின் பிரதிநிதியாக, பெண்கள் தேசிய வீராங்கனையான ரச்சேல் ஹொலண்டிலும் சியோலிலும் நடந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டாள். ஒவ்வொரு பயணத்திலும் அவளுக்கு ஒரு இலட்சம் ரூபா செலவாயிற்று.

இந்தப் பணம் சுலபமாகச் சேர்க்கப்பட்டதல்ல. இதைச் சேர்க்க பல தொழிலகங்களை அவள் சுற்றி வர வேண்டியதாயிருந்தது.

அந் நாளையில் ஆசிரியராக ஒரு பாடசாலையில் பணி புரிந்தாளாயினும் திடீரென அவளை ராஜினாமா செய்யும்படி கேட்டது பாடசாலை நிர்வாகம். இரண்டு குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு அவளிடம் இருந்தது. மற்றொரு தொழிலைத் தேட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. விளையாட்டுத் துறையில் சுதந்திரமாக ஈடுபட, அவளுக்கு ஒரு தொழிலும் பணமும் தேவைப்பட்டன.

ரச்சேல் விளையாட்டுத்துறை அமைச்சரைச் சந்தித்தாள். 1987 இல் அவளுக்கு ரயில்வேயில் வேலை கிடைத்தது.

எதிர்கொண்ட பிரச்சினைகள் பற்றிப் பேசும்போது, 'விண்வெளி நீச்சலுக்கு மனத்தைரியமும் நிதானமும் அவசியம், ஆனால் அது இந் நாளையில் ஒரு கார் ஓட்டுவதை விடப் பாதுகாப்பானது' என்கிறாள் ரச்சேல்.

கரோலினாவில், இரு தடவைகள், தனக்கு நேர்ந்த விபத்துகளைப் பற்றி நினைவு கூருகிறாள் ரச்சேல். ஒன்று; பிரதான பரசூட்டும் இணைப் பரசூட்டும் ஒரே வேளையில் திறந்து கொண்டன. இதனால் முதுகில் காயம் ஏற்படவிருந்தது. ஆனால் துரித யுக்தி ஒன்று அவளைக் காப்பாற்றியது.

உங்களின் விசேட விருப்பம் என்ன என்று கேட்கப்பட்டபோது, ரச்சேல் சொன்னது;

"ஆக்ராவில் விண்வெளி நீச்சல் செய்துகாட்ட விரும்புகிறேன். விண்வெளி நீச்சல் பயிற்சியாளருக்கு ஒரு காட்சியை நடத்திக்காட்ட விரும்புகிறேன்"

ஒரு தாயாக, ஆசிரியையாக, விண்வெளியில் வீராங்கனையாக விளங்கும் இந்த இள நங்கையின் கனவுகள் யாவும் நனவாகும் என்று இவளால் உற்சாகமடையும் இந்தியப் பெண்கள் வாழ்த்துகிறார்கள்.

எதிர்கொண்ட பல பிரச்சினைகளை முறியடித்து வெற்றி கொண்டு இந்தியாவின் பெண்களிடையே ஒரு அபூர்வ விளையாட்டைப் பிரபலப்படுத்தும் இந்தியாவின் முதல் பெண் விண்வெளி நீச்சல் வீராங்கனையாகத் திகழ்கிறார் ரச்சேல் தோமாஸ்.

உதவி:- ஃபெமினா செப்.88 □

# ஜே. கிருஷ்ணமூர்த்தி

## — ஒரு நோக்கு

**ஜே.** கிருஷ்ணமூர்த்திக்கும் டேவிட் போம் (DAVID BOHM) க்கும் நடைபெற்ற இரண்டு உரையாடல்களை உள்ளடக்கியதான மனுத்துவத்தின் எதிர்காலம் (The Future of Humanity) என்ற நூலைப் படித்து முடித்தபின், அதன் பாதிப்பால் ஜே. கி. யின் தத்துவம் பற்றி எனக்குள் எழுந்த எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என நினைத்தேன். அதன் அறுவடையே இக் குறிப்புக்கள்.

ஜே. கி. யின் பேச்சுக்களுக்கும், உரையாடல்களுக்கும் 'தத்துவம்' என்ற சொல்லைப் பயன்படுத்துதல் தவறு என்று அவர் மீது ஈடுபாடு கொண்டுள்ள சிலர் கருதக்கூடும். ஆனால் அதற்காக நாம் ஒன்றும் செய்ய முடியாது. சில வார்த்தைகளுக்குப் பிரத்தியேகமான அர்த்தங்களை வழங்குவதனூடாகவும், இதுவரையுள்ள எல்லாக் கடவுட் கொள்கைகளையும். ஆத்மீகக் கோட்பாடுகளையும் மறுப்பதன் மூலமாகவும் அவர் ஒரு 'விளையாட்டை' விளையாடுகிறார் என்றே தோன்றுகிறது. இந்த நேரத்தில் எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. அதனை இங்கே சொல்வது, நான் சொல்ல நினைப்பதை இன்னும் சற்றே தெளிவாக்கும் என நினைக்கிறேன். எனது ஆறு வயது மகள் மூடப்பட்ட பெட்டியொன்றினுள் எதனையோ வைத்தாள்; அல்லது ஒன்றையும் வைக்கவில்லையோ தெரியவில்லை. அப் பெட்டியை எனக்கு முன்னால் உள்ள மேசைமேல் வைத்துவிட்டு, அதனைச் சுட்டிக் காட்டி, "அப்பா, அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்று சொல்லுங்க பாப்பம்" என்றாள். என்னால் விடைகூறமுடியவில்லை. ஏனெனில் அவளைத் தவிர இன்னொருவருக்குத் தெரியாது அவள் அதனுள் என்ன வைத்திருக்கிறாள் என்று— அல்லது ஒன்றும் வைக்கவில்லையோ என்று. அது அந்தச் சிறுமிக்கு ஒரு விளையாட்டு, அதுபோல ஜே.கி. யும் அவரே மட்டும் அறிந்த அல்லது அனுபவிக்கிற ஒன்றைப் பற்றிப் பேசுகிறார். அதற்கான பாதையோ வழிகாட்டல்களோ இல்லாமையால் அவர் பேசுவதன் உண்மைத் தன்மையைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான வாய்ப்பே இல்லாது போய் விடுகிறது.

**கங்கா — யமுனா**

அவரது பேச்சுக்கள், உரையாடல்கள் எல்லாம் அவர் பேசும் 'அனுபவங்களை' இதற்கு முன்னர் வேறொருவர் வெளிப்படுத்தியதில்லை என்று பொருள் கொள்ளும் வகையிலே அமைந்துள்ளன. அந்த வகையில் அவர் தனித்தன்மையானவர்தான். ஆனால் அதே தர்க்கத்தைத் தொடர்ந்து செல்கையிற் தவிர்க்க முடியாதவாறு அது சில சந்தேகங்களையும் எழுப்பி நிற்கின்றது. அவர் மனத்தைப் (Mind) பற்றி அதாவது பிரபஞ்ச மனத்தைப் (Universal Mind) பற்றிப் பேசுகிறபோது இதுவரை வேறு ஒருவரும் ஏன் இதனை அறிந்தோ, அனுபவித்தோ இருக்கவில்லையென்று அவரைக் கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏன்? மேலும் அவர் சொல்லுகிறார். காலத்தாலும் எண்ணங்களாலும் (Thoughts) கொணரப்பட்ட நாகரிகம்— அதாவது சமயம், கலாசாரம், ஒழுக்கக்கோட்பாடுகள் போன்றன அவை இயல்பிலேயே பிளவுடையன; எனவே அவை அழிவுக்கே இட்டுச் செல்கின்றன என்று. இன்னொரு வகையில் சொல்வதானால் காலத்தின்மேல் மனித மூளையால் ஆக்கப்பட்டவை எவையோ அவை எப்போதும் அழிவுக்கே இட்டுச் செல்லும். பிரபஞ்ச மனம் (Universal Mind) என்று அவரால் அழைக்கப்படுவது இந்தப் பிளவுகளைக் கொண்டிராதது. எனவே அம் மனத்தராயிருத்தலே வாழ்க்கைக்கு உண்மையான அர்த்தத்தை வழங்குகிறது. ஆனால் அதற்கான பாதைகளோ, வழிகாட்டல்களோ எதுவும் இருக்க முடியாது.

மீண்டும் ஒரு கேள்வி. பாதைகளோ, வழிகாட்டல்களோ இல்லையானால் அவர் தம் வாழ்நாள் முழுவதும் ஒன்றையே திருப்பித் திருப்பிச் சொல்வதன் மூலம் என்ன செய்கிறார்? அவர் 'ஆத்மீகத்தை' போதிப்பதைத் தவிர வேறொன்றைத் தொழிலாகவோ, கடமையாகவோ தெரிவு செய்து கொள்ளவில்லை. அதனால் 'அவர் தன்னை ஒரு 'குரு' என்று சொல்லிக் கொள்ள மறுத்தாலும், நாம் அவரை அவ்வாறே எடுத்துக் கொள்ள வேண்டி நிர்ப்பந்திக்கப்படுகிறோம்.

உண்மையை அறிதலிற் சொற்கள் பங்கேற்கவில்லையானால் அவர் ஏன் சொற்களை, எண்ணச் செயற்பாட்டை (Thought Process) தெரிந்தெடுத்தார். எண்ணங்களுக்கு அப்பாற்பட்டதை உணர்த்துதற்கு, சொற்களால் விளங்கப்படுத்த முடியாதவற்றைப் புலப்படுத்துவதற்கு காலத்தைக் கடந்ததைப் புலப்படுத்தக் காலத்தையே கருவியாக்குகிறார்; ஏன்? எண்ணச்செயற்பாடும், காலமும் எண்ணச் செயற்பாட்டையும், காலத்தையும் கடக்கத் தேவை என்பதனாலா?

(9ஆம் பக்கம் பார்க்க)

# அறிவியல் உலகம்

## ஓசோன் படலம் ஒடுங்குகிறது

ஓசோன் மண்டலம் பூமியின் வாயுமண்டலத்திற்கு அடுத்துள்ளது. பூமிக்கு ஒரு கவசம் போன்றது இந்த ஓசோன் படலம். சூரியனிலிருந்து வரும் 'அல்ட்ரா வயலட்' கதிர்களை உறிஞ்சி பூமியைக் காப்பது இந்த ஓசோன். இந்த அல்ட்ராவயலட் கதிர்கள் நேராக பூமியை அடைந்தால் அது கண், உதடு, தோல் போன்றவற்றிற்கு ஊறுவிளைவிக்கும். மேலும் விண்மண்டலத்தின் கிருமிகளை பூமியின் வளிமண்டலத்தினுள் புகவிடாதும் ஓமோன் காக்கின்றது. ஓசோன் மண்டலம் சூரியனின் வெப்பத்தை 8/1 பங்காக குறைக்கின்றது, இவ்வாறு சூரிய வெப்பம் குறைக்கப்படாது பூமியை அணுகின் அவ் வெப்பத்தினால் பூமியே எரிந்துவிடக்கூடிய நிலை ஏற்படும்.

இந்த ஓசோன் மண்டலம் தடிப்பில் ஒடுங்கி உள்ளது. மேலும் இதில் துளையும் ஏற்பட்டுள்ளது. இது பற்றி ரஷ்ய வளிமண்டல நிபுணர் 'ஜோர்ஜி க்ரெச்கோ' கூறிய கருத்துக்கள் வருமாறு; இவர் இக் கருத்துக்களைக் கூற உதவியது சல்யூட் -7 விண்கலத்தின் ஆய்வுகளாகும்:

"ஓசோன் படலம் தடிப்பில் மிக மெல்லியதாகி விட்டது. தென் துருவத்தின் ஓரிடத்தில் ஓசோனில் துளைஒன்று ஏற்பட்டுள்ளது. மேலும் கூடிய விரைவில் ஐரோப்பாவிலும் இத்துளை ஏற்படும் அபாயம் உள்ளது. இவ் ஓசோன் படலம் பிரிந்தால் பூமியில் நோய்கள் பெருகும், விவசாயம் செய்ய முடியாது நிலங்கள் பழுதுபட்டுவிடும். எங்கும் நோயின் ஆதிக்கமே தென்படும். அத்துடன் பூமி அழிந்து யாருமற்ற கிரகமாகி விடும்.

இந்த ஓசோன் மண்டலத்தில் துளையேற்பட முக்கிய காரணம் விண்வெளிப்பயணங்களே விண்வெளிப் பயணத்தின் போது ரொக்கட்களின் கழிவுகள் ஓசோனில் படிந்தன. இந்தக் கழிவுகள் ஓசோனை அரித்துத் துளையை ஏற்படுத்தின.

அடுத்த காரணம், தொழிற்சாலைப் புகைக் கழிவுகள் மேல் நோக்கிச் சென்று ஓசோனில் படிந்து அரிக்கத் தொடங்கின. இவ்வாறு மேலே ரொக்கட்கழிவுகளும், கீழே தொழிற்சாலைக்கழிவுகளும் அரித்து அரித்து ஓசோனை நலிவடையச் செய்தன.

இவ்வாறு ஏற்பட்டுக் கொண்டே போனால் கி.பி 2000 ஆண்டுகளுக்கு முன்னே ஓசோன் படலம் பிரிந்துவிடக்கூடும். பிரிந்து விடாதிருப்பதற்கு தொழிற்சாலைகளைக் குறைக்கவேண்டும். அல்லது விண்பயணங்களைக் கட்டுப் படுத்தவேண்டும். இது முடிகின்ற காரியமா?"

இதுவே ஜோர்ஜி க்ரெச்கோ கூறிய கருத்துகளாகும்.

ஆதாரம்: மிரர் (தை—1989)

## நெப்டியூனை அணுகும் வொஜேயர்—2

விண் ஆய்வில் தற்போது முழுமூச்சுடன் நிற்பது அமெரிக்காவின் விண்ணாய்வுக்குழு. முதலில் செவ்வாயை ஆராய கலங்களை ஏவிய நாடு அமெரிக்கா. அது வைக்கிங்—1 வைக்கிங் — 2 கலங்களாகும். இவை செவ்வாயில் இறங்கி படங்களை அனுப்பின.

இதை அடுத்து 1977 ஆம் ஆண்டுவொஜேயர்-1 வொஜேயர்-2 ஆகிய கலங்களை அனுப்பி வைத்தது. இவை வியாழன், சனிக்கிரகங்களை அணுகி படங்களை எடுத்து அனுப்ப செலுத்தப்பட்டன. அதன்படி படங்களை எடுத்து அனுப்பின. அவ்வேளையில் வொஜேயர்-1 திசைமாறிச் சென்றுவிட்டது.

வொஜேயர் -2 தன்பயணத்தைத் தொடர்ந்தது. கடந்த 1986 ஆம் ஆண்டு வொஜேயர் - 2 யுறேனஸ் கிரகத்தை அணுகி படங்களை அனுப்பியது.

1987 ஆம் ஆண்டு யுறேனசை அடுத்து அமைந்துள்ள நெப்டியூனை அணுகி படங்களை அனுப்பியது. அத்துடன் நெப்டியூனின் உபகிரகமான ரிரைட்டனையும் படம் எடுத்தது. இப்படங்களை எடுக்கையில் வொஜேயர் - 2 நெப்டியூனிலிருந்து 85 கோடியே 30லட்சம் மைல்கள் தொலைவிலிருந்தது.

வரும் 1989 ஒகஸ்ட் மாதம் வொஜேயர் -2 நெப்டியூனிற்கு 5000 கிலோமீற்றர் உயரத்தில் நின்று படங்களை எடுக்கும் இவ்வேளையில் ரிடைட்டனிலிருந்து 40,000 கிலோமீற்றர் தூரத்தில் கலம் நிற்கும்.

**தி. தவபாலன்**

தற்போது நெப்டியூனை அணுகிக் கொண்டிருக்கும் வொஜேயரை கலிபோர்ணியாவில் உள்ள 'பாஸ்ரேனு' விண் ஆய்வுக்குழு கண்காணித்துக் கொண்டிருக்கின்றது.

வொஜேயர் -2 வெகுவிரைவில் படங்களைஎடுத்து விஞ்ஞானவளர்ச்சிக்கு உதவும் என விண்ஆய்வினர் நம்புகின்றனர்.

## எயிட்ஸ்

'Acquired immune deficiency syndrome' என்ற வசனத்தின் சுருக்கமே, இன்று உலகை அச்சுறுத்தி வரும் எயிட்ஸ் என்ற பாலியல் நோய். 1981 ஆம் ஆண்டு அமெரிக்க தேசத்தின் நியூயோர்க், சன்பிரான்சிஸ்கோ ஆகிய நகர்களில் ஒரே பாலார் உடலுறவு கொண்டதன் மூலம் உருவானது எயிட்ஸ். இந்த எயிட்ஸை உருவாக்குவது எயிட்ஸ் என்ற வைரஸாகும்.

அமெரிக்காவில் தோன்றிய எயிட்ஸ் கனடா, மேற்கு ஐரோப்பா, கரீபியன், லத்தின் அமெரிக்க நாடுகள் வழியாகப் பரவியது. இதே வேளையில் ஆபிரிக்காவில் பச்சைக் குரங்கு, ரீஸஸ், பன்றிவால் குரங்கு முதலிய குரங்குகள் ஏற்படுத்திய இனச்சேர்க்கையினால் எயிட்ஸ் உருவாகியது. இங்கிருந்து ஆசியா, ஓசினியா, அவுஸ்திரேலிய நாடுகளுக்கு எயிட்ஸ் பரவியது.

1988 ஆம் ஆண்டு 75,000 எயிட்ஸ் நோயாளிகள் உலக நாடுகளில் பதிவுசெய்யப்பட்டார்கள். இதில் அமெரிக்காவில் 50,000 பேர்கள், பிரான்ஸில் 2500 பேர், கனடாவில் 1700 பேர், மே. ஜேர்மனியில் 1500 பேர் உகண்டாவில் 2300 பேர், பிறேசிலில் 2300 பேர், பிரிட்டனில் 1170 பேர், ஹைட்டியில் 912 பேர் பதிவு செய்யப்பட்டார்கள்.

இன்று, உலகில் 130 நாடுகளில் எயிட்ஸ் நோய் பரவியுள்ளது. அமெரிக்க மருத்துவத்துறை வெளியிட்ட கருத்துக் கணிப்பில், '1991 ஆம் ஆண்டு உலகில் 270,000 பேர் எயிட்ஸால் பாதிக்கப்படுவர்; இதில் 179,000 பேர் இறக்கலாம்' எனக் கூறப்பட்டுள்ளது.

78 வீதமானோர் ஒரேபாலார் கொண்ட உடற்சேர்க்கையாலும், 16 வீதமானோர் நாலாந்தரப் போதைப்பொருட்களை உபயோகிப்பதாலும். 4-6 வீதமானோர் சோதனையற்ற இரத்த தானத்தினாலும் எயிட்ஸைப் பெறுகின்றார்கள்.

ஆதாரம்; ஸைன்ஸ் இன் த. யு. எஸ். எஸ். ஆர்- சஞ்சிகை

## டைனோசர்கள் ஏன் அழிந்தன?

66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் 'டைனோசர்' என்ற பல்லினை இராட்சத விலங்குகள் பூமியில் வாழ்ந்ததற்கான ஆதாரங்களை, பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். இந்த டைனோசர்கள் ஏன் அழிந்தன என்பதற்கு 'றொச்செஸ்ரர்' பல்கலைக் கழக புவியியல் பேராசிரியர் அலிஷ் பாஷா தந்த தகவல், கடந்த டிசம்பர் 'ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியானது.

இன்றைக்கு 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் எரிமலைகள் அதிக மாயிருந்தன. அந்த எரிமலைகள் புகைந்து கொண்டிருந்ததே தவிர அவை வெடிக்கவில்லை. ஆனால் வானில் உலவிக் கொண்டிருந்த துண்டுக்கோள்கள் (Astoids) பூமியை உரசிய வேளையில் பூமியில் எரிமலைகள் வெடித்துச் சிதறின. பூமியில் காலநிலை மாற்றம் ஏற்பட்டது. இந்த இயற்கையின் அழிவே டைனோசர்களின் அழிவிற்குக் காரணமாகும்.

கலிபோர்ணியா பல்கலைக்கழக புவியியலாளர்கள் 8 வருடங்களாகச் செய்து வந்த 'இரிடியம்' கதிர்ப்பொருட் பரிசோதனையும், வேற்றுக்கிரகங்கள் பூமியுடன் மோதியதால்தான் டைனோசர்கள் அழிந்தன என்பதைத் தெரிவிக்கின்றது.

தற்போது சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட டைனோசர் ஒன்றின் எலும்புக்கூடு கனடா, சீனா ஆகிய நாடுகளது புவியாய்வாளர்களின் பரிசோதனையில் உள்ளது. □

"இயற்கை என்னவினோதமானது! மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால், எங்களுக்கு கண்ணாடி தேவைப்படும் என்று அவளுக்குத் தெரியாது. ஆனால் பார், எங்கே அவள் காதுகளை வைத்திருக்கிறாள் என்று!"

# சர்ச்சைக்குரிய சஞ்சீவி

சமீப காலமாக 'அதிசய மரம்' எனக்கொள்ளப்பட்ட சஞ்சீவிமரம் (Eucalyptus) வளர்த்தல் விஞ்ஞானிகளினதும், விவசாயிகளினதும் எதிர்ப்புக்குள்ளாகியுள்ளது. சஞ்சீவி மரம் வளர்த்தல் சூழலைப் பாதிக்கிறது, தண்ணீர் வளத்தைத் தடுக்கிறது என்கிறார்கள் அவர்கள்.

**எஸ். பி. கே.**

தாய்லாந்திலும் இந்தியாவிலும் விவசாயிகள், சஞ்சீவி மரங்கள் வளர்க்கும் திட்டத்தை எதிர்த்துக் குரலெழுப்புகிறார்கள். ஒருகாலத்தில் பெரிதும் வரவேற்கப்பட்ட இத்திட்டம் இன்று சந்தேகத்திற்குரியதாகி விட்டது.

மூன்றும் உலக நாடுகளில், பெருமளவில் சஞ்சீவி வளர்க்கும் திட்டத்தை விஞ்ஞானிகள் தீவிரமாக எதிர்க்கிறார்கள். சமூகக் காடுவளர்ப்புத் திட்டத்தின் பிரதான பகுதியாக உள்ள 'சஞ்சீவி மரம் நாட்டுதல்' சமூக நலனையும் சூழலையும் முன்னேற்றும், திட்டமாகச் சொல்லப் படுகின்றது. ஆனால், உண்மையில் அவை சூழலையும் மண்ணையும் நீரையும் பாதித்து, சூழ உள்ள வறிய சமுதாயங்களின் விவசாய முயற்சிகளையும் மறைமுகமாகப் பாதிக்கிறது.

1988 யூலையில், தென் தாய்லாந்தில், கிராம வாசிகள் ஒரு மரம் நாட்டும் நிலையத்தை முற்றுகையிட்டு சஞ்சீவி நாற்று மேடைகளையும், கருவிகளையும், வதிவிடங்களையும் தீயிட்டுக் கொழுத்தினார்கள். சஞ்சீவி மரத்தை வியாபாரத்திற்காக வளர்த்தலை அவர்கள் எதிர்த்தனர்.

1983 மார்ச்சில், இந்தியாவிலுள்ள கர்னாடக மாநிலத்திலுள்ள விவசாயிகள், சஞ்சீவி வளர்த்தலை எதிர்த்துக் குரலெழுப்பி, பல ஏக்கர் விதை மேடைகளை அழித்தனர். நீர் சுரக்கும் நிலப்பகுதிகளில் சஞ்சீவி வளர்ப்பதால் நீர்ச் சுனைகள் வற்றி விடுகின்றன என்று கோபமுற்று, அவர்கள் இந்நடவடிக்கையில் இறங்கினர். இந்தியாவின் பிற பகுதிகளிலும் இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம் பெற்றன. சஞ்சீவி கிணறுகளை வற்றச் செய்யும், நிலத்தை மலடாக்கும், கிட்ட உள்ள செடிகளைக் கொல்லும் என்று, இந்தியக் கிராம மக்கள் கூறுகிறார்கள்.

மூன்றும் உலக நாடுகளில் மரம் நாட்டல் திட்டத்தின் கீழ் சஞ்சீவி வளர்த்தலை உலக வங்கி உற்சாகப்படுத்திய நாளிலிருந்து, இந்தப் பிரச்சினை எழுந்தது. விறகு, சிறு பலகைத் தேவைகளைச் சரிக்கட்டவென இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

இந்திய வன இலாகா அலுவலர்கள், சஞ்சீவியை, காடு வளர்ப்பதற்குப் பொருத்தமான இனம் என்றும், அது விரைவாக வளரும் என்றும், கடதாசி தயாரிக்கவும், றெயான் துணி ஆலைகளுக்குப் பயன்படுகின்றது என்றும் அதன் அவசியத்தை வற்புறுத்துகிறார்கள். விறகாகப் பயன்படுவதுடன் பலவகை எண்ணெய்யும் இதிலிருந்து தயாரிக்கப்படுகிறது. பிறேசில் நாட்டில் விறகாக, மரப்பலகைகளாக, இரும்பு உலைகளுக்குத் தேவையான கரியாகவும் பயன் படுகிறது. பரந்த அளவில் வளர்க்கிறது.

சஞ்சீவி வளர்ப்புத் திட்டம் கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமெனச் சொல்லப்பட்ட போதும், அது அவர்களுக்கு நன்மை செய்யவில்லை. விறகாகப் பயன் படுத்த அதில் போதிய வைரமில்லை. சஞ்சீவி இலைகளை கால்நடைகள் தின்பதில்லை. எதற்கும் மேலாக உணவுப் பயிர்களை விளைவித்த விவசாய நிலங்கள் இப்போ வளமிழந்து விட்டன.

சஞ்சீவி வளர்க்க வேண்டிய முதல் காரணம் தொழிற்சாலைகளுக்கு மரக்கூழும், பலகையும் விநியோகிப்பதே.

'இந்திய விஞ்ஞான, தொழில் நுட்ப, இயற்கை வளங்கள் ஆய்வு மன்றத்' தின் பேச்சாளர் டொக்ரர் வந்தனு சிவா, இந்திய விவசாயியின் அடிப்படைத் தேவையை அளிக்க சஞ்சீவி தவறிவிட்டது, என்று சொல்கிறார்.

இனிமேல் சஞ்சீவி வளர்க்கக் கூடாது, உலக வங்கி அத்திட்டத்தை நிறுத்தவேண்டும் என்று, அரசு சார்பற்ற கூட்டமைப்பான 'மூன்றும் உலக தொடர்பகம்' (Third world network) வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்திய சஞ்சீவி நாட்டல் திட்டத்திலிருந்து, மூன்றும் உலக நாடுகள் ஒரு பாடம் படித்துக் கொள்ள வேண்டுமென்றும், அது கூறுகிறது.

உதவி: தேர்ட் வேர்ல்ட் நெற்வேக் ஃபீச்சர்ஸ் □

# எழுத்தாளர் பட்டறை

## கலைச்சாரல்

மார்ச் மாதம் 10, 11, 12 ஆம் திகதிகளில் நான் உளவியல் ஏடு ஆரம்ப எழுத்தாளர்களுக்கு கதை, கவிதைத் துறையில் பயிற்சியும், அறிவும் தரும் முகமாக ஓர் எழுத்துப் பட்டறையை நடத்தியது. வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் 11 மணி வரையும் வதிவிடப் பயிற்சி நெறியாக அமைக்கப்பட்ட இப் பட்டறையில் ஆண்களும் பெண்களுமாக 35 ஆரம்ப எழுத்தாளர்கள் பங்கு கொண்டனர். பெரும்பாலானோர் இளைஞர்கள்.

சங்கரன்

நிகழ்ச்சி நிரல் ஒழுங்காகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஏற்கனவே இந் நிகழ்ச்சி நிரல் பயிற்சியாளர்களுக்கும், பங்கு கொள்ளும் பிரபல எழுத்தாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது. 5-30 நித்திரை விட்டெழல். 5-30—6-00 காலைக்கடன்கள். 6.00—7-00 காலை இசையும் கலந்துரையாடலும். 7.00—8.00 காலை உணவு 8.00 காலை அமர்வு ஆரம்பம் என்று ஓர் இராணுவக் கட்டுப்பாட்டுக்கமைய இந் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளது என்று ‘செல்லமான’ குற்றச்சாட்டு பலராலும் சுமத்தப்பட்டாலும், இக் கட்டுப்பாடே பட்டறைக்கு ஒரு கனதியைக் கொடுத்தது டன், பயிலுனர் உச்சப் பயன்பாட்டைப் பெறவும் வழி செய்தது. இரவு 10.30 மணிக்குப் பயிலுனர் படுக்கைக்குச் செல்லும் வரை நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டிருந்தது.

இவ் வெழுத்துப் பட்டறையின் நோக்கங்கள் பல. ஒன்று, இளம் எழுத்தாளர்களை ஓரிடத்தில் தொடர்ச்சியாக தங்க வைத்து அவர்களை ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வைத்தல்; இரண்டு, வளர்ந்த எழுத்தாளர்களை அவர்கட்கு அறிமுகம் செய்து அவர்களுடன் நெருங்கவைத்து அவர்களின் அநுபவங்களை இவர்கட்குப் பகிரல். மூன்று, இலக்கிய வடிவங்களான கதை, கவிதை பற்றிய கோட்பாடுகளை பயிலுனர்கட்குத் தருவதுடன் தரமான கதை, கவிதைகளில் அவர்கட்குப் பரிச்சயமேற்படுத்துதல், நான்காவது, மொழிப்பிரயோகம் பற்றிய அறிவையூட்டல்.

ஐந்தாவது, 3 நாட்களும் அவர்களுக்கு எழுத்துப் பயிற்சியளித்தல்; அதன் மூலம் சிறந்த ஆக்கங்கள் உருவாக வழி சமைத்தல்.

பயிற்சி — அறிவு என்ற இரு தளங்களில் நடைபெற்ற இப் பட்டறை வந்திருந்த பயிற்சியாளருக்கு மிகப் பயன் தந்தது என்பதை பட்டறை முடிவில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பும். பயிற்சியாளரின் உரைகளும் காட்டின.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் கலாநிதி சி. மௌனகுரு இந் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்ததோடு, எழுத்துப் பட்டறையின் செயற்பாடுகளை மூன்று நாட்களும் நெறிப்படுத்தினர். இவருக்கு உதவியாக அருட்திரு வின்சன் பற்றிக் அடிகளாரும் எழுத்தாளர் யோசேப் பாலாவும், மயிலங்கூடலூர் பி. நடராஜனும் துணை நின்றனர்.

வெள்ளியும், சனி பகலும் பட்டறையின் சிறு கதை நாட்களாக அமைந்தன. வெள்ளிக்கிழமை நிகழ்ச்சிகள் அன்று மாலை 4 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகின. அமலமரித் தியாகிகள் குருமார் சபையின் வடமாநிலத் துணை முதல்வர் வண. பிலிப் அடிகளார் நிகழ்ச்சிகளைத் தொடக்கி வைத்து ஆசி வழங்கினர். வின்சன் பற்றிக் அடிகளாரின் தலைமையுரை, எஸ். டேமியன் அடிகளாரின் வரவேற்புரை என்பவற்றைத் தொடர்ந்து 5.00 மணிக்கு கலாநிதி சி. மௌனகுருவின் நெறிப்படுத்தலில் பட்டறை ஆரம்பமானது.

எழுத்துப் பட்டறையின் நோக்கம் நடைமுறை, செய்முறை ஆகியன பற்றி பயிற்சி பெற வந்தோருக்கு விளக்கமளித்த மௌனகுரு, தொடர்ந்து சிறுகதையின் கட்டமைப்பு பற்றி உரை நிகழ்த்தினர். சிறுகதை வடிவத்தின் தோற்றத்திற்கான காரணம், அதன் உருவ அமைப்பு, தமிழில் அது வந்து அமைந்த விதம், சிறுகதைகளுக்கான கரு, அது பின்னப்படும் முறை, என்பன பற்றி விளக்கிய இவர் பயிற்சியாளருக்குச் சில நல்ல சிறுகதை எழுத்தாளர்களின்கதைகளையும் அறிமுகம் செய்தார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய மயிலங்கூடலூர் நடராஜன் இலங்கையர்கோனுடைய ‘வெள்ளிப் பாதசரம்’ சிறுகதையினை வாசித்துக் காட்டி சிறுகதைக்குரிய கட்டமைப்பும், அம்சங்களும் அதில் இடம்பெறும் வகையினை சுவையாக பயிற்சியாளருக்கு விளக்கினர்.

அடுத்து உரையாற்றிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறுகதையின் மொழிப்பிரயோகம் பற்றி உரையாற்றினர். ஆக்க இலக்கியகாரர்கள் மொழியை எவ்வாறு அணுக வேண்டும் என்பதனை விஞ்ஞான ரீதியாக விளக்கிய பேராசிரியர், பாத்திரங்களின் மொழியை நுணுக்கமாக எழுத்தாளன் அவதானித்து அறியவேண்டும் என்றார். சந்தர்ப்பத்திற்கு ஏற்பமொழியை எவ்வாறு கையாளுகிறோம் என்பதனை உதாரணங்களுடன் விளக்கிய அவர் பேச்சு மொழிப் பிரயோகம் பற்றிய ஒரு தெளிவை பயிற்சியாளருக்குத் தந்தது.

பொருளை எவ்வாறு சிறுகதை ஆக்க முடியும் என மூத்த எழுத்தாளரான சொக்கன் பயிற்சியாளருக்குப் பின்னர் விளக்கினர். தன் அனுபவங்களுக்கூடாக நிகழ்த்திய அவரது உரை பயிற்சியாளர்களுக்கு அத்திவாரத்தை போட்டது போல அமைந்தது.

இவ்வுரைகள் பயிற்சியாளர்கட்கு சிறுகதையின் கட்டமைப்பு, மொழியைக் கையாளுதல், பொருளை அல்லது சம்பவத்தைக் கதையாக்குதல் போன்றவற்றில் ஆரம்ப அறிவினை ஏற்படுத்தின. இரவு 7.15 க்கு சிறுகதை எழுதுவதற்கான சில அறிவுறுத்தல்கள் எழுத்தாளர்களுக்கு மயிலங்கூடலூர் நடராஜனல் வழங்கப்பட்டன.



மேற்படத்தில் இடமிருந்து: சி. மௌனகுரு, எம். ஏ. நுஃமான் கீழே, பயிலுநர்களின் கவிதை வாசிப்பு நிகழ்ச்சியில்: லூசியா, தர்மினி, ராஜன் முங்கனா, வின்சன் பற்றிக் அடிகள், என். சண்முகலிங்கம் ஆகியோர்.

“சிறுகதை எழுதுவதோ கவிதை பாடுவதோ செயற்கையான சூழலில் நிகழ முடியாது. ஆனால் சிறுகதையும், கவிதையும் உள்ளத்தில் உள்ளவை. ஒவ்வொருவர் உள்ளத்திலும் பல நிழ்வுகள் எம்மைச் சிறுகதையாக எழுது என்று எழுத்தாளனைக் கோரி நிற்கின்றன. ஒரு தூண்டுதல் ஏற்பட்டதும் அதனை எழுத்தாளன் எழுத்தில் வடிக்கின்றான். இது உங்களுக்கு ஒரு தூண்டுதலே” என்ற விளக்கத்துடன் நடராஜன் தலைப்புக்களை வழ்ங்கினர்.

ஒரு மணி நேரம் ‘கியூடெக்’ ஆய்வரங்க வளாகத்தில் பூரண அமைதி. அங்கே சிறுகதை யோகம் நடந்தது. உடனடியாக 35 கதைகளும் வாசிக்கப்பட்டு மதிப்பிடப்பட்டன; மறு மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டது. 6 மணி நேர இடைவேளையில் உருவாக்கப்பட்ட சிறுகதைச் சூழலில் எட்டுச் சிறுகதைகள் தேறியமை ஒரு வெற்றியே.

மறு நாள் காலை 5.30 மணிக்கு காலை இசையும்பயிற்சியாளர்களின் கலகல ஓசையும் மண்டபத்தைநிறைத்தன. ‘எப்படி எழுதுகிறேன்’ என்ற தலைப்பில் அன்று பேசவரும் எழுத்தாளர்களின் நல்ல கதைகள் ஒவ்வொன்றும் தட்டச்சில் பொறிக்கப்பட்டு, முதல் நாளிரவே பயிற்சியாளருக்குத் தரப்பட்டு அவற்றை கருத்தூன்றி வாசிக்கும்படி கேட்கப்பட்டிருந்தது. அந்தக் கதைகள் பற்றிய கலந்துரையாடல் காலை சாப்பாட்டு நேரத்தில் நடைபெற்றது.

சனிக்கிழமை காலை நிகழ்ச்சிகள் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகின; மௌனகுரு நெறிப்படுத்துனராக அமைந்தார். ஒரு கரு எழுத்தாளனுக்கு உருவாவதும் அது வளர்வதும் நமக்கு தெரியாத ஒன்று. அது எழுத்தில் - அதுவும் செம்மைப்படுத்தப்பட்டு வந்த பின்தான் அதனை நாம் அறிகிறோம். கரு உருவான நேரத்திலிருந்து அது கலையாக வெளிப்படுவது வரையிலான படைப்புச் செயற்பாடுகளை எழுத்தாளர்கள்தான் கூற வேண்டும் எனக் கூறிய மௌனகுரு, எழுத்தாளர்களை உரிய முறையில் அறிமுகம் செய்தார்.

பெண்களின் பிரதிநிதியாக அயராது எழுதும் கோகிலா மகேந்திரன் பேசுகையில் ‘நான் வாசித்த நூல்களே என்னை மாற்றின. நான் மக்களுடன் பேச விரும்பியதாலேயே எழுதுகிறேன். எழுத்து ஒரு சலிப்புத்தரும் போராட்டம். ஒரு கரு மனதில் ஊறிப் பின்னர்தான் கதையாகிறது’ போன்ற கருத்துக்களைக் கூறி தான் கதை எழுதும் முறையினை விளக்கினர்.

இருப்பியல் வாதம், அன்னியமாதல் முதலிய பண்புகளை எழுத்தில் கொணரும் அ.யேசுராசா ‘என் இயற்கையைக் கண்டுபிடிக்கவே நான் எழுதுகிறேன். நான் மனிதனாக இருக்கிறேன். அந்த இருப்பின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க எழுதுகிறேன்’ என்றார். திட்டமிட்டு எழுதாமல் இயல்பாக எழுதினால்தான் இலக்கியம் சிறக்கும் என்ற அவர், அதுவே தான் எழுதும் முறை என்றார்.

சமூகப் பண்பாட்டுக்கு முக்கியமளிக்கும் பிரபல்யமான எழுத்தாளர் செங்கை ஆழியான் சமூகப் பண்பாட்டு விழுமியங்களை இனம் கண்டு எழுத வேண்டும் என்றும் மனிதனின் தீராத் துயருக்கு தீர்வு தரும் வகையில் எழுத்துக்கள் அமைய வேண்டும் என்றும், கூறினர்.

படவரைஞருக்குரிய நுட்பத்தோடு எழுதும் சாந்தன் பேசுகையில் ‘என்னில் ஏற்படும் தாக்கம் என்னை எழுதத் தூண்டுகிறது’ என்றார். முதலில் எழுதிய பிறகு அதனை ஊறப் போடுகிறேன். பல நாட்களுக்குப் பின் படிக்கையில் அதனைத் திருத்தலாம் போலத் தோன்றுகிறது— பின் செம்மை செய்கிறேன் எதையும் மறைக்காமல் எழுதுதல் என் இயல்பு’ என்றார்.

சோசலிச யதார்த்தவாத நெறியைப் பின்பற்றும் ‘தாயகம்’ ஆசிரியர் தணிகாசலம் எழுத்துக்கு ஒரு பயன்பாடு உண்டென்றார். வரலாற்று ரீதியாக மனிதனை மனிதன் அடக்குகிறான். அதற்கான காரணங்களுள்ளன. எழுத்தாளன் சமூகத்தை மாற்றி, ஓர் உன்னத மானுடத்தைப் படைக்க எழுத்தில் தன் பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றார்.

ஐந்து தசாப்தங்களாக எழுதும் முதிர்ந்த எழுத்தாளர் சொக்கன் தனக்குள் உருவாகும் ஒரு கரு எவ்வாறு தன்னுள் வளர்ந்து, பின்னர் சிறுகதையாக வெளிப்படுகிறது என்பதை, விளக்கினர்.

எழுத்தாளனின் அநுபவங்கள் பயிற்சியாளர்களில் தொற்றிக் கொண்டமையைப் பின்னால் நடந்த கலந்துரையாடல் காட்டியது. வளர்ந்த இந்த எழுத்தாளர்களிடம் இளம் எழுத்தாளர்கள், நிறைய வினாக்களை வினவினர். எழுத்தாளர்களினது — ஏற்கனவே கொடுபட்ட கதைகள் பற்றி, அவற்றின் கரு, மொழி பற்றியெல்லாம் வினவினர். இளம் எழுத்தாளர்களின் வினாக்கள் பெரிய எழுத்தாளர்களைச் சிரிக்க வைத்தன; சிந்திக்க வைத்தன; திக்குமுக்காடவும் வைத்தன.

1.00 மணிக்கு மதிய போசனத்தின் பின் 3.00 மணி தொடக்கம் 4.00 வரை ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. பயிற்சியாளர் அவற்றுடன் பரிச்சயமாயினர்.

கவிதைக்கான பயிற்சி சனிக்கிழமை 4.00 மணிக்கு ஆரம்பமானது. மௌனகுருவின் நெறிப்படுத்தலில் ஆரம்பமான இவ்வரங்கில் மொழியியற்துறை விரிவுரையாளர் எம்.ஏ. நுஃமான் கவிதையின் கட்டமைப்பு பற்றி உரை நிகழ்த்தினர். அவர் தமது உரையில் ‘அனுபவமே கவிதையாகிறது’ என்று கூறி கவிதைக்கென்று தனியான ஒரு கட்டமைப்பில்லை. ஆனல் ஒவ்

(11ஆம் பக்கம் பார்க்க)

## உடைப்பு

என்னை விடுங்கள்
இந்தக் கட்டுக்குள்
அடங்கியிருக்க என்னுல் முடியாது
நான் சுதந்திரன்
என் இறக்கைகளை விரித்துக்
காற்றில் அலைய வேண்டும்
யாழ்ப்பாண விட்டத்துள் சுருங்கி
பழைமையில் மூழ்கி
மரபிலே திளைக்கும் சராசரியல்ல நான்
வெறும் உடலும் அல்ல நான்
என்னை விடுங்கள்
ஏதாவது ஓர் தத்துவக் காட்டிலே
கதியென வீழவும் முடிவதில்லை என்னுல்
நான் சுதந்திரன்
எல்லாவற்றிலும் ஒருமெய்மை ஒளிந்திருக்கிறது
அவற்றை அறியவேண்டும்
இந்தப் பூகோளப் பரப்பில்
அகமும் புறமும் அலசிவர
தயவுசெய்து என்னை விடுங்கள்
எனக்கு
பூரண விடுதலை வேண்டும்!

— கார்த்திகா □

## மயிர்களும் உயிர்களும்

நீர் தேங்கிய பள்ளங்கள்
முதல் நாள் பெய்த மழையைச் சொல்லும்.
வெற்றிலை சப்பித் துப்பிய தரையாய்த்
தெரியும் தெருவோ
அன்று
விடிய நிகழ்ந்த கொலைகளைக் கூறும்.

எனினும் என்ன?
இன்னும் கொஞ்ச நேரம் செல்ல
இந்தச் சந்தி
எதுவும் நிகழாப் பாவனையில்
இயங்கும் இங்கே.
சனங்கள் பஸ்ஸுக்காக குழுமி நிற்பர்.
அரிசிக்காரிகள் கூடி இருப்பர்.
பக்கத்துக் கடையில்
வழக்கம்போல் காதைத்துளைக்கும் சினிமாப்
பாட்டு.
சிப்பால் உதிரும் மயிர்கள் ஆயின
இன்றெம் உயிர்கள்.
மழை தணியக் காத்திருந்து
மறுபடியும் தொடர்வதாயிற்று வாழ்க்கை.

— உமா வரதராஜன் □

## நான் — பிள்ளை

திடீரென வானம் விழுந்தது.
நாலு தென்னைகளும் ஆறேழு பனையும்
தலையாலே முறிந்து தொங்கின.
ஒரு கோழி வீரிட்டுக் கத்தியது.

எனது பிள்ளை விளையாடிக் கொண்டிருந்தான்.
வாசல் முழுக்க நட்சத்திரங்கள்
உடைந்து நொருங்கிக் கிடந்தன.

ஒரு முகிலை எடுத்து அழைந்துவிட்டு முத்தமிட்
டான்.
பின்னர் எழுந்து
அங்கே சிதறிக் கிடந்த நிலவின் துண்டுகளை
ஒட்டிப் பார்த்தான், பிறகு எறிந்தான்.
இன்னொரு நிலவைச் செய்யலாம் என்று
தனக்குள்
சொல்லிக் கொண்டு நடந்தான்.

நான் வீட்டுக்குள் இருந்தேன்.
என் சின்ன வயதில் இந்த நிலவிற்காய்
அழுத அழுகைகளை நினைத்தேன்.

ஒரு நட்சத்திரத்தைக் கூட என்னுல் அந்த
நாட்களில்
பிடித்துப் பார்க்க முடியாமல் போயிற்று
வானம் என்னைவிட வெகு தொலைவில் இருந்தது.

என் தலைமுறைக்குள் இப்படியொரு பெரிய
மாறுதல்!
மாங்காய்க்கு கல்லை எறிவதுபோல்
வானுக்கு எறிந்து
நிலத்தில் கிடத்துகின்ற பிள்ளை!

இப்போது அவன் வானத்தை
மீண்டும் சரி செய்துவிட்டு நடக்கிறான்.

— சோலைக்கிளி □

## தூரிகை

- கலாபவனம்
- சஞதனனின் ஓவியக் கண்காட்சி

தமிழ் மாவட்டங்களில் கலாபவனங்கள் அமைக்கப்பட வேண்டுமென, பத்திரிகைகளில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. முன்பு வேறு பலரும் இக் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். ஆயினும், ஆக்கபூர்வமான செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்படாமையால் கலைத்துறை வளர்ச்சியினைத் தடைப்படுத்தும் முக்கிய காரணிகளில் ஒன்ருக, அது இன்றும் காணப்படுகிறது.

நீண்ட 'மந்த காலத்'தின் பின்னர், 1986 நடுப்பகுதியில் யாழ். பல்கலைக்கழக கலாசாரக் குழு ஒழுங்குபடுத்திய, ஓவியர் அ. மாற்குவின் மாணவியர் மூவரின் 'ஓவிய அரங்கேற்றத்'தின் பின்னர் எமது சூழலில் ஒரு விழிப்பு ஏற்பட்டது; பல ஓவியக் கண்காட்சிகள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. ஓவியப்பயிற்சி பெறுவதிலும் புது ஆர்வம் காணப்பட்டு வருகிறது. 'தேடலும் படைப்புலகமும்' என்ற பெயரில் ஓவியம் சிற்பம்பற்றி முக்கிய நூலொன்றும் வெளிவந்திருக்கிறது.

புதியவர்களின் ஓவியக் கண்காட்சிகள் அடுத்தடுத்து ஒழுங்கு செய்யப்பட்டு வரும் தற்போதைய சூழலில், 'கலாபவனங்களின்' அவசியம் பற்றிக் கவனப்படுத்தும் முயற்சிகள், பொருத்தமானதாகவும் அமைகின்றன. கலைசார்ந்த நிறுவனங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும். யாழ். ஸ்ரான்லி கல்லூரியில், கலைக் கண்காட்சிகள் நடத்துவதற்கென அமைக்கப்பட்ட 'கலைக்கூடமொ'ன்று உள்ளது. ஆனல், அது திருத்தங்கள் செய்யப்படவேண்டிய நிலையிலுள்ளது. அதில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டால், புதிய கலாபவனக் கட்டிடங்கள் அமைக்கப்படும்வரை — தற்காலிகமாக, யாழ். மாவட்டத்தவராவது பயன் பெறமுடியும்.

யாழ். கல்வித் திணைக்களம் சார்ந்து ஓவிய சிற்பத்துறைகளிற்காக நுண்கலை மன்றமொன்று சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 'சித்திர ஆசிரியரை'த் தெரிவு செய்யும் 'வேலை வங்கி'யாக மாருது, முறையான பயிற்சிகளைவழங்கி தேர்ச்சிவாய்ந்த ஓவியர்களை உருவாக்குவதில், அது கவனங் கொள்வது நல்லது. 'சித்திரம்' வெறும் தொழில் என்பதாகத்தான், பல சித்திர ஆசிரியர்களுக்கு இங்கு இருக்கிறது. அவர்களில் பலர் ஓவியராக இல்லை; ஓவியங்களைப் படைப்பதில் அவர்களுக்கு அக்கறையேயில்லை; பலருக்கு ஆற்றலுமில்லை. மிகச் சிலர் தான் தொடர்ந்து ஓவியங்களை உருவாக்கி வருகிருர்கள், இச்சீரற்ற நிலைமைகள் மாறும்வகையில் நுண்கலை மன்றம் செயலாற்ற வேண்டும். தகுதி வாய்ந்தவர்களை விலக்கி வைக்காமல், அத்தகையவர்களை இணைத்து அது செயற்பட்டாற்தான் ஆக்கரீதியான பயன்கள் ஏற்படும்.

சஞதனன் என்ற 20 வயது இளைஞரின் ஓவியக் கண்காட்சி இம்மாதம் 12, 13,14 ஆகிய திகதிகளில், யாழ், 'வேம்படி மகளிர் கல்லூரி'யில் நடைபெற்றது. 62 ஓவியங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

சஞதனனிடம் ஆற்றலிருப்பதாக எம்மை உணரவைக்கும் ஓவியங்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவானதாகவே இருப்பது துரதிர்ஷ்டமானது. புகைபிடிக்கும் இரு சிறுவர்களை பென்சிலால் வரைந்திருக்கும் 'திசைமாறிய பறவைகள்', வர்ணத்தாலான 'யாழ்ப்பாணக் கோட்டை' 'மூவர்' 'இழப்பு' 'சிந்தனை', 'ஆற்ருமை', 'சங்கமம்' 'விடுநோக்கி' என்ற ஓவியங்கள் என்னைக் கவர்ந்தன. வர்ணச்சேர்க்கை, பாவம்,வெளிப்பாட்டு அமைதி என்பன எம்மில் ஈர்ப்பினை ஏற்படுத்துகின்றன. இவை சஞதனனிடம் உள்ளுறைந்துள்ள ஆற்றலைக் கோடிகாட்டுகின்றன.

ஆனல், தன்னிடமுள்ள இந்த ஆற்றலைத் திரட்டிக் குவித்து கலைவெளிப்பாட்டை அவர் நிகழ்த்தியிருப்பதாக, ஏனைய (பெரும்பாலான) ஓவியங்களைக் கொண்டு சொல்ல முடியாது. சித்திர வகுப்பறையில் வரையப்படும் 'வெறும் சித்திரங்களாக'வே அவை இருக்கின்றன. வர்ண அமைதியோ, வடிவ அமைதியோ, உணர்வைக் கிளர்த்தும் தன்மையோ அவற்றில் இல்லை; போதிய அக்கறை காட்டப்படாமல் வரையப்பட்டனவாகத், தெரிகின்றன. அவற்றில் பல கற்பனையாக வரையப்பட்டவை, சில வேறு படங்களைப் பார்த்துக் கீறப்பட்டவை. இந்த வகையில், மனிதர்கள் இயற்கைக் காட்சிகள் என்பன எமது சூழலுடன் இயைபு பெருமல் போலியானதாக இருக்கின்றன. கலைஞனே எழுத்தாளனே தனது சூழலை —மனிதர்களை— தனது அனுபவப் பரப்பினுள் உள்வாங்கி, தனது சொந்தத் தன்மைகளை அடையாளங்காட்டும் முறையில் கலைப்படைப்புகளாக வெளிப்படுத்துவதே சரியானது. சஞதனன் போன்ற இளைஞர்கள் நிச்சயம் இதனை மனதிற் கொள்ள வேண்டும்.

கண்காட்சி என்று வரும் போது எண்ணிக்கை முக்கியமல்ல. தனித்துவம் நிறைந்த தரமான படைப்புகள் இடம் பெறுவதே, முக்கியம் — அவை சிறு தொகையினதாகக்கூட இருக்கலாம்.

— நீலாம்பரன் □

## திசை 2000 - ரூபா பரிசுச் சிறுகதைப் போட்டி

சிறுகதை இலக்கியத்துறைக்கு வளமூட்டும் நோக்கோடும், சகல எழுத்தாளர்களையும் — இளம் தலைமுறையினர், எழுதாமல் இருக்கும் பழந்தலைமுறையினர் — ஆகிய சகலரையும் ஊக்குவிக்கும் நோக்கோடும் சிறுகதைப் போட்டியொன்றை நடாத்தத் திசை தீர்மானித்துள்ளது.

### பரிசு விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | : | 750/= ரூபா |
| இரண்டாம் பரிசு | ; | 500/= ரூபா |
| மூன்றும் பரிசு | ; | 250/= ரூபா |
| ஆறுதல் பரிசுகள் | : | ஒவ்வொன்றும் 100/=ரூபா வீதம் ஐந்து பரிசுகள் |

### நிபந்தனைகள்

1) சிறுகதைகள் அனைத்தும் எழுதுவோரின் சொந்தப் படைப்புகளாக இருக்கவேண்டும்.
2) இதற்கு முன்னர் வேறு எங்காயினும் வெளியிடப்படாதவையாக இருக்கவேண்டும்.
3) எந்தப் பிரச்சினையையும் மையமாக வைத்து எழுதப்படலாம்.
4) ஒருவர் எத்தனை கதைகளையும் அனுப்பலாம். ஆனல், கதைகள் ஒவ்வொன்றும் முழுத்தாளில் (பூல்ஸ் கப் தாள்) பத்துப் பக்கங்களிற்கு மேற்படாமல், தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்
5) எழுத்தாளரின் பெயர், புனைபெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்
6) போட்டி முடிவு திகதி 3-5-1989
7) சிறுகதைப் போட்டி, ஆசிரியர் 'திசை', 267 பிரதான வீதி, யாழ்ப்பாணம். என முகவரியிடப்பட்டு, கதைகள் அனுப்பப்படவேண்டும்.
8) திசை ஆசிரியருடன் மேலும் இருவர் கொண்ட நடுவர் குழுவின் முடிவே, இறுதியானது.
9) பரிசுக் கதைகளும், தரமான ஏனைய கதைகளும் திசையில் தொடர்ந்து வெளியிடப்படும். □

திசையின் சிறுகதை

# பக்குவம்

க. சட்டநாதன்

எவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் இருந்தும் அந்தத் தவறு நடந்து விடுகிறது. சைக்கிளைப் பூட்டப்போன போதுதான் அதை அவன் அவதானித்தான்.

சைக்கிளில் பூட்டில்லை.

அவனது வாகனம் மிகவும் பழையது. றலி. எழுபத்திரெண்டாம் ஆண்டு நூற்றிநாற்பது ரூபாய்க்கு வாங்கியது.

'பழசு' என்றால் திருட்டுப் போகாதா என்ன?பயம் காரணமாக அவனாகவே ஒரு பூட்டை—ஒன்றரையடிச் சங்கிலி, அதே அளவிலான சிவப்பு இறப்பர் ஹோஸ், பழைய பாட்லொக் ஆகியன கொண்டு — தயார் செய்து கொண்டான்.

அந்தப் பூட்டு சைக்கிளுக்காகத் தயாரிக்கப்பட்டது. என்றாலும், வீட்டில் அவனது மனைவி பலதேவைகளுக்கு அதனைப் பயன்படுத்திக் கொண்டாள்.

இரவு வேளைகளில் கோழிக்கூடு பூட்ட — முன்கேற் ஆமைப்பூட்டு கைபிசகாக எங்காவது மாறிவைக்கப் பட்டுவிட்டால் — கேற்றைப் பூட்ட என்று அது அவளுக்குப் பயன்பட்டது.

இரவுகூட, கோழிக்கூடு பூட்ட அவள் எடுத்தது இவனுக்கு ஞாபகம் வந்தது.

மனைவியை மனதால் வைதபடியே செய்வதறியாது விழித்தவனுக்கு, பொறிதட்டியது போல் அந்த யோசனை தோன்றியது.

'பக்கத்திலை ... ... ஆற்ரையன் வீட்டிலை சைக்கிளைப் போட்டால் பத்திரமாய்க் கிடக்கும். ... ...'

சைக்கிளை உருட்டியபடி பிரதான வீதிக்கு வந்தான். அவனது மனசுக்குப் பிடித்தமாதிரி வீடு எதுவுமே இல்லாததுபோலத் தோன்றியது. ஒரு கணம் தயங்கியவன், ஒற்றைக்கேற் போட்ட, அந்தச் சிறிய வீட்டை எட்டிப் பார்த்தான். ஒருவரும் இல்லை. யோசனை ஏதுமற்றவனாய் சைக்கிளை உள்ளே உருட்டினான்.

அப்பொழுது;

அவள், அந்தப் பெண்குழந்தை — ஒன்பது அல்லது பத்து வயது இருக்கும் — எதிரே வந்தாள். அவள் கறுப்பாயிருந்தாள். கையும் காலும் சுள்ளி சுள்ளியாயிருந்தன. முகத்தில் மட்டும் ஒரு திரட்சி, களை, கண்கள் பெரிதாய், சதா சிரித்தபடி இருந்தன. இவனை மிகுந்த பற்றுதலோடு பார்த்தாள்.

முதற்பார்வையிலேயே அவளை இவனுக்குப் பிடித்துப் போய்விட்டது.

அழிந்துபோன சிவப்புப்புள்ளிச் சீத்தைச் சட்டை போட்டிருந்தாள்.

'என்ன?' என்பது போல அவள் மிகுந்த கனிவுடன் இவனைப் பார்த்தாள்.

"சைக்கிளுக்குப் பூட்டில்லை ... ...அதுதான்... ... இதிலை, விட்டிட்டுப் போகலாமா ...? பக்கத்திலை செத்தவீடு போகவேணும் ...... "

சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை மட்டும் ஆட்டினாள்: அந்தக் குட்டி இளவரசி

"வீட்டிலை பெரியாக்கள் ... ...?"

"அம்மா கடைக்குப்போயிட்டா ... ... "

அவள் அம்மா என்றது எஜமானியையா? பெற்ற தாயையா......? அவனுக்குக் குழப்பமாக இருந்தது. கேட்கவும் துணிவு கொள்ளாதவனாய், சைக்கிளை வீட்டின் கிழக்குச் சுவரோரமாய்—சிற் சீமேந்தில் உரசாதவாகில் — பக்குவமாய் விட்டுவிட்டு நகர்ந்தான்.

சாவீட்டில், சொந்தபந்தங்களைவிட பரந்தாமனின் சக ஆசிரியர்களும் அவனிடம் கற்ற மாணவ மாணவியருமே நிறைய இருந்தார்கள்.

இப்படி ஒரு அகாலமுடிவு அவனுக்கு வந்தது இவனுக்குக் கவலையாக இருந்தது.

'முப்பத்தொருவயதில் சாவருவது எவ்வளவு கொடுமை... அவனுக்கும் ஈஸ்வரிக்கும் இடையே எவ்வளவு நெருக்கமான உறவு தளிர் கொண்டது......திருமணம்கூட இரண்டொரு மாதத்தில் என்றிருந்ததே......எல்லாமே அவனளவில் ஏன் பொய்த்துப் போய் விட்டன......'

'அவனது ஆர்வம், சிரத்தை, மாணவர்களின் தன்மைக்கேற்ப கற்பிக்கும் பக்குவம், எல்லாமே ஒரு துப்பாக்கி ரவையின் முன்னால் அர்த்தமிழந்து போவதென்றால்......'

குரொஸ் ஃபயரிங்கில் தான் அவனுக்கு இந்தமுடிவு வந்தது என்பது பலரது அபிப்பிராயம். 'இல்லை...... இல்லை...... ஏதோ தொடர்பாம் அதனால் தான்' என்ற குசுகுசுப்பும் இருந்தது.

'எதுவோ......?என்ன காரணமோ......? அவனது மரணம் தவிர்க்க முடியாததாகி விட்டது......துயரம் தருவதாக இருக்கிறது.'

தலைவாசலில் — சற்று உள்ளே, பெட்டியுள்—அவன் நெடுங்கிடையாய்க் கிடந்தான். அவனைப் பார்த்ததும் நெஞ்சிலும் முகத்திலும் பட்டெனயாரோ பலமாக அறைந்தது போல் ஓர் உணர்வு இவனுள் படர்ந்தது. சக மனிதன் என்ற அளவில், அந்த மரணத்தின் கொடுமை இவனையும் பற்றிக் கொண்டது. இவன் கலக்கமுற்றவனாய் அவனது உடலைப் பார்த்த கையோடு வெளியே வந்து உட்கார்ந்து கொண்டான்.

இவன் வெளியே வந்த சில நிமிடங்களுக்குள்ளாகவே அவனது இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியது.

சுடலை வரை போவதா விடுவதா என்று இரு மனப்பட்டபோது, பசுபதிதான் இவனை இழுத்துக் கொண்டுபோனான்.

'இரத்த வெடிலும் பிணவாடையும் தான் இந்த மண்ணின் விதியாகிவிடுமோ......?இயல்பு தப்பிய இந்த வாழ்வு—எத்தனை காலம் நீடிக்கப் போகிறது .....'

மதியம் திரும்பிய வேளையில் எங்கோ தூரத்தில் வானொலியில் பூபாளம்!

'இது என்ன அபத்தம்...... எல்லாமே ஒழுங்கற்று தலைதடுமாறியதான நிலை ஏன்...? இயல்பும் இசைவும் பிறழ்ந்த இந்த வாழ்வு ஒழுங்கு படுவது எப்போது......? எல்லாமே தூரத்துக் கனவாய் ஆகிவிடுமோ......'

பிரதானவீதியில் ஏறியதும் இவனுக்குச் சைக்கிளின் ஞாபகம் வந்தது. அந்தச் சிறிய வீட்டின் பக்கம் பார்வை சென்றது. சைக்கிள் விட்ட இடத்தில் அப்படியே பத்திரமாக இருந்தது.

இந்தத் துயரங்களிடையே சைக்கிள் பற்றிய நினைப்பு இவனை வெட்கமுறச் செய்தது.

நீலவானமும், கருங்கடலும், பூமியும் தழுவி நின்ற பெருவெளியில்தான் அந்தச் சுடலை இருந்தது.

பரந்தாமனின் உடலைத் தீ நாக்குகள் தழுவியபோது இவனது தேகம் லேசாக நடுங்கியது. கண்கள் பனித்தன. உள்ளத்து உணர்வுகள் அனைத்துமே உறைந்து போனதான நிலை. இவன் பசுபதியைப் பார்த்தான். அவன் யாருடனோ கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தான்.

'பசுபதியை ஏன் எதுவும் தொடவில்லை!'

சுடலையை விட்டு வெளியே வந்த போது மழை பிடித்துக் கொண்டது. இவன் பசுபதியின் குடையினுள் ஒதுங்கிக் கொண்டான்.

"பாலிங் கிளவுட்ஸ் மச்சான்...... மழைவிட்டிடும் ..."

'இந்த வாழ்வு......இதன் அர்த்தம் எல்லாமே நகரும் முகில் கூட்டம் தானா?

மரணம், வாழ்வு பற்றிய விசாரம் தொற்றிக் கொண்டது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

பசுபதி களைப்பற்று சளசளத்தபடி வந்தான். அப்படி எல்லாம் இவனால் இருக்கமுடியவில்லை. சிறகொடிந்தது போல மனசு படபடப்பற்று இருந்தது. இந்த ஒடுக்கம் மனசுக்கு இதமாயிருந்தது.

மழைவிட்டதும் கிழக்கு வானில் பொட்டுப் பொட்டாய் நீலவானம் தெரிந்தது. வானம் எவ்வளவு விரைவாக நிர்மலமாகிவிட்டது.

மனதின் அழுத்தங்கள் யாவும் லேசானது போல அவன் உணர்ந்தான்.

பிரதான வீதிக்கு வந்ததும் அவன் பசுபதியிடம் விடை பெற்றுக் கொண்டான்.

சைக்கிள் ஞாபகம் வந்தது.

'காற்றுக் கீற்றுப் போய்க் கிடக்குமோ......? அந்தப் பிள்ளை......அவளது தம்பி...... வால்வ்ரியூப்பைத் தொட்டுக் கிட்டுப் பார்த்து......'

ஏதோ கனவு கலைந்தது போலவும், மீண்டும் இயல்பான சூழலில் காலூன்றியது



போலவும் அவனுக்கு இருந்தது.

சோர்வு நீங்கிய பாடாய் இல்லை. சைக்கிள் வைத்த வீட்டை அடைந்தபோது அங்கு அவனுக்கு அதிசயம் காத்திருந்தது.

சைக்கிள் மழையில் நனையாத படிக்கு பக்குவமாய் 'ஸன் சேட்டின்' கீழ் முன்புறமாக எடுத்துவைக்கப்பட்டிருந்தது.

'யாருடைய வேலை இது...... அந்தக் குழந்தைதான் எடுத்துவைத்திருப்பாளோ ......சிரமமாக இருந்திருக்குமே...... சைக்கிளை எடுக்கும்போது எதிர்ப்பக்கமாகச் சரிந்து அடிகிடி பட்டிருந்தால் ......அல்லது உருட்டும் போது உடம்பில் உரசல் ஏதாவது......'

இவன் சைக்கிளை எடுத்த போது, ஈரக்கையை தனது சீத்தைச் சட்டையில் துடைத்தபடி ஓடிவந்தாள்.

"மழை பெய்தது அதுதான்......"

"மழை பெய்தால் என்னம்மா......? உனக்குக் கஸ்டமா இருந்திருக்குமே......"

"கஸ்டமா... எனக்கா ?," அவள் உதடு நெகிழச் சிரித்தாள்.

உடைந்து போன உள்ளம் நிரவல் பெற்றுப் பரவசம் கொள்ள, அவளை வாஞ்சையுடன் பார்த்தான்.

வாழ்வின் அர்த்தமே அவள் என்பது போலவும், உயிர்ப்பசையின் தொடர்ச்சியை ஒரு சுடராய் அவள் தாங்கி நிற்பது போலவும் அவனுக்குத் தோன்றியது.

நன்றிப் பெருக்குடன், செல்லமாக அவளது தலையை வருடியபடி இவன் விடை பெற்றுக் கொண்டான்.

இவன் கேற்றைத் திறந்து சைக்கிளை எடுத்த போது சைக்கிள் கேற்றுடன் அடிபட்டுக் கொண்டது.

"கவனம்...... பார்த்தெடுங்க......காலிலை அடிபடப்போகுது......"

திரும்பிப்பார்த்தான். கன்னக்குழியச் சிரித்தபடி அவள் நின்றாள்.

வெளியே வந்த பின்புதான் குழந்தையின் பெயரைக் கேட்காமல் விட்டது மனதில் பட்டது.

'எதுவுமே .....தாமதமாய்த் தான் உங்களுக்கு......'

மனைவி அடிக்கடி கூறுவது ஞாபகம் வந்தது.

கொழும்புத்துறைப் பக்கம் வந்தால், மீளவும் ஒருமுறை இந்தக் குழந்தையைப் பார்க்கவேணும், பேரைக் கேட்கவேணும்......' என்றெல்லாம் அவனுக்குத் தோன்றியது.

மனம் பரவசம் கொண்டு சிறகு விரித்ததான உணர்வு. பரந்தாமனின் மரணம் தந்த உளைச்சல் சிறுகச் சிறுக நீங்கியதான நிலையில் எல்லாமே அவனுக்கு அழகாக இருந்தன.

அவனுக்கு முன்பாக, எதிரே வந்து அவனைக் கடந்து சைக்கிளில் சென்ற பெண் பிள்ளையின் லாகவம், சுமக்கமுடியாத சுமையைச் சுமந்து செல்லும் சிறுவனின் முகம் காட்டும் முதிர்ச்சி, தோளோடுதோள் கை போட்டு சைக்கிள்களில் சமாந்தரமாய் உலாபோகும் சீருடை அணிந்த கல்லூரி மாணவர்களின் குதூகலம், பஸ்ரியன் சந்தியில் திரும்பிய பஸ்ஸில், கணமே தெரிந்து மறைந்த அந்தப் பெயர் தெரியாத, எங்கோ எப்பொழுதோ பார்த்துப் பிரியப்பட்ட அழகியின் முகம். எல்லாமே அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தன.

உலகத்தின் அழகுகள் அனைத்தையும் வாரிக் கொட்டிக் கொண்டதான ஓர் அனுபவ விகாசம் அவனுள் செறிவு கொண்டது.

தன்னை மறந்தவனாய், சாருகேசி ராகப் பாடலொன்றை முணுமுணுத்தபடி, சைக்கிள் பெடலை அழுத்தி மிதித்தான். சைக்கிள் இயல்புக்கு மீறிய தான வேகம் கொண்டது. இவனுக்குக் காற்றில் மிதந்தது போலிருந்தது. □

# உயிர்ப்பின் தளிர்கள்

இயேசுவின் சிலுவையும் அவரின் இரத்தக் காயங்களும் உன்னத உயிர்ப்பும் இன்றைய சமுதாயத்தினருக்கு வழிகாட்டிக்-கற்களாய் அமைந்துள்ளன. கரடு முரடான பாதைகளில் மனிதன் தவழக் கற்றுக்கொள்ளும் போதெல்லாம் சிலுவைப் பாதையில் பதிந்து நிற்கும் இயேசுவின் திருவடிகளின் அடிச் சுவடுகள் திடமான நம்பிக்கையையும், உறுதியான குறிக்கோளையும், ஒளிமயமான எதிர்காலத்தையும் ஏந்திக் கொண்டு வருகின்றன.

மனிதன் பிறக்கிறான். இறக்கிறான். இவைகள் சாதாரண பயணக் கதைகள்தான். என்றாலும் மனிதன் வாழ்ந்த வாழ்க்கையில் எழுதிக் காட்டிய சரித்திர சம்பவங்களே அவனின் தராதரத்தை நிறுத்திக் காட்டுகின்றன.

"சீ .... சனியன் செத்துத் தொலைந்து போ... .."என்று சக மனிதரின் மரணத்தை விரும்புவோர் தமக்கு தொந்தரவாக இருப்போரும், இடையூறு விளைவிப்போரும் அழிய வேண்டும் என விரும்புவோரே.

"உத்தமர்கட்டு நெஞ்சிலே ஆலயம்......" என்று வாழ்வை விரும்புவோர் தமக்கு வேண்டியவர்கள், தம்மை உருக்கி அடுத்தவரை வாழ வைப்போர் உயிர் பெற வேண்டும் என விரும்புவோரே.

கிறீஸ்துவின் மரணம் "இவன் ஒழிந்து போகட்டும்" என்று கருதியவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவரது துன்பத்தில் பங்கு கொண்டவருக்கு வருத்தத்தைக் கொடுத்தது. ஆனால் அவரை வெறுத்தவருக்கும், அன்பு செய்தவர்களுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது அவரது உயிர்ப்பு. காரணம் அதை யாரும் எதிர்பார்க்கவில்லை.

கிறீஸ்துவின் உயிர்ப்பு வரலாற்று சிறப்பு மிக்க ஒரு நிகழ்ச்சி மட்டுமல்ல, சமுதாயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற ஒரு படிப்பினையூட்டும் செயலாகவும் காணப்படுகின்றது. கிறீஸ்துவின் உயிர்ப்பின் பின்னணியில் 'விடுதலை வாழ்வு' பின்னிப் பிணைந்திருந்தது. புதிய வாழ்வு என்ற புதிய அத்தியாயம் ஆரம்பமாகி இன்னும் அது தொடர்ந்து வளர்ந்து கொண்டே வருகின்றது.

கிறீஸ்துவுக்குக் கிடைத்த மரணம், அவர்மக்களின் புதிய வாழ்வின் விதை. அதாவது வாழ்வுக்கு ஆரம்பம் மரணம். மிளகு விதை காரமாக இருக்கிறது என்பதற்காக ஒருவன் அவற்றைப் புவிக்கடியில் புதைத்து வைத்தால், அது முளைத்து வளர்ந்து பெரிய செடியாகி ஆயிரக்கணக்கான மிளகு விதைகளை உற்பத்தியாக்கி விடும். உண்மை, நீதி, அன்பு என்பவற்றைக் குழி தோண்டிப் புதைப்பது என்பது அவற்றின் வளர்ச்சிக்கு உரமிடுவதாகவே முடியும்.

இன்னும் இனம், மொழி, மதம், சாதி, அந்தஸ்து என்ற பேதங்களால் ஆயிரக் கணக்கில் மனித சமூகங்களில் படுகொலை செய்யப்படுகிறார்கள். இறக்கின்ற மனிதரிலும் பார்க்கக் கொல்லப்படும் மக்கள் எண்ணிக்கை அதிகம் என்று அச்சம் கொள்ளக்கூடிய அளவுக்கு மனித நேயங்கள் பறிபோகின்றன. உண்மையில் இயேசுவும் கொல்லப்பட்டார். அன்று கிறீஸ்து எழுப்பிய போராட்டக் குரல், ஆட்சியில் இருந்து மக்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த தலைவர்களுக்கு எவ்வாறு 'பயத்தை' ஏற்படுத்தியதோ அவ்வாறுதான் இன்றும் உரிமை கேட்கும் மக்களின் குரல் அதிகாரவர்க்கத்தின் ஆணிவேர்களையே பயமுறுத்துகின்றது.

கிறீஸ்து இறந்து உயிர்த்தது எதற்காக? ஒவ்வொரு மனிதனும் உயிர்த்தெழ வேண்டும் என்பதற்காகத்தான். மனிதன் மகிழ்ச்சியில் திளைக்க வேண்டும் என்றுதானே.

ஆனால் மனிதன் மண்டை ஓடுகளைக் கொண்டே உயிர்த்த இயேசுவுக்கு மாலை போடுகிறான். இயேசுவின் உயிர்ப்பு இறைவனின் வெற்றி. தீய சக்திகளின் தோல்வி. அது சாவுக்கு மேல் வாழ்வு கண்ட வெற்றி. பகைமைக்கு மேல் அன்பு கொண்ட வெற்றி. பொய்ம்மைக்கு மேல் உண்மை கொண்ட வெற்றி.

தீமையின் பிடியில் அன்றாடம் செத்துக் கொண்டும், நடைப் பிணங்களாகக் காட்சி கொடுத்துக் கொண்டும் திரியும் மனிதன் தன்னையும், தன்னைச் சூழவே இருக்கும் உடன் மனிதரையும் அடிமைப்படுத்தும் தீமையின் சங்கிலிகளை உடைத்து உயிர்ப்பிக்க விரும்பாத மனிதனுக்கு இயேசு ஒரு செத்துப் போன மானிடன் தான். எனவே இயேசுவின் உயிர்ப்பு விழா ஓசை இழந்து மரத்துப் போன சுதந்திர உணர்வின் நரம்புகளை மீண்டும் தட்டி எழுப்பி, வாழ்வுக்கு நம்பிக்கை ஊட்டி, முழு மனித விடுதலைக்காகப் பாடுபடவும் மரணிக்கவும் தன்னை அர்ப்பணிக்க ஒவ்வொரு மனிதனையும் தூண்டட்டும். □

**சுவாமி ஜீவா போல் அ. ம. தி.**

---

# ருஷ்டியைச் சுற்றி நிலவும் அபிப்பிராயங்கள்

*எழுத்தாளர் ருஷ்டி பற்றிய விவகாரம், இன்று உலகெங்கும் உள்ள அறிவாளிகள், சமயவாதிகள், படித்தோர், பாமரர் ஆகிய சகல மட்டங்களிலும் கிளறப்பட்டு வாதப்பிரதிவாதங்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை கோவைப் படுத்திக் கீழே தருகின்றோம்.*

அமெரிக்கப் பத்திரிகையான வாஷிங்டன் போஸ்ற் பயங்கரவாதம் பற்றிய ஆய்வு செய்யும் இயான் கெல்டார்ட என்பவரை மேற்கோள் காட்டி "லண்டனில் வாழும் வெறிபிடித்த கொமேய்னியின் கையாட்கள், இப்பொழுது ருஷ்டியைக் கொல்வதற்கு இயங்கத் தொடங்கியிருக்கலாமே" என அறிவிக்கிறது.

□ □

கெய்ரோவிலுள்ள அல் அஸார் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிரமுகர் சிலர் "தக்க விசாரணையின்றி ருஷ்டியின் ரத்தம் சிந்தப்படக்கூடாது. அவருக்குத் தன்னை விளக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். அத்தோடு அவர் செய்த பிழைக்கு மன்றாடவும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும்" என்றும் கேட்டுள்ளனர்.

□ □

ஈரான் பற்றிய செய்தியாளர் பி. பி. சிக்கு கொடுத்த செய்தியில், "முதற்தடவையாக கொமேய்னி ஒருவருக்கு முன்கூட்டியே மரணதண்டனை விதித்துள்ளார்; அல்லது அதற்காக நாட்டையே செயல்படத் தூண்டியுள்ளார்" என்றார்.

□ □

ரஷ்யாவின் அரசாங்கப் பிரசுரக் குழுவுக்குத் தலைவராய் உள்ள மிக்கேல் நெனுஷேவ், "ருஷ்டியின் நாவல் இங்கு பிரசுரிக்கப்படுவதற்கு எதுவித தடையுமில்லை. பிரசுர கர்த்தா எவராவது அதைப் பிரசுரிக்க முன்வந்தால் அது நிச்சயமாக பிரசுரிக்கப்படும்" என்று கூறியுள்ளார்.

□ □

ருஷ்டி விவகாரம் — சம்பந்தமாக சிங்கள எழுத்தாளரான எச். ஏ. செனிவிரத்ன பின்வருமாறு 'லங்கா கார்டியனு'க்கு எழுதியுள்ளார்:

ருஷ்டி விவகாரம் சம்பந்தமாக எந்தெந்த நாடு என்னென்ன நடவடிக்கை எடுத்தாலும், உலகின் சகல எழுத்தாளர்களும் அவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிர்ப்புக் காட்டாமல் இருக்க முடியாது.

இஸ்லாமிய மதத்துக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் அவரது நூல் அமைந்ததற்காக, கொமேய்னியால் மரணதண்டனை விதிக்கப்பட்ட ருஷ்டி, தலைமறைவாகியுள்ள இந்நேரத்தில், இஸ்லாமிய நாடான நைஜீரியாவின் நோபல் பரிசு எழுத்தாளர் வோல் சொயிங்கா கொமேய்னியின் முடிவைக் கண்டித்துள்ளார். கோர்மன் மெயிலர் உட்பட அனேக அமெரிக்க எழுத்தாளர்களும் இதைக் கண்டித்துள்ளனர். கோர்மன் மெயிலர் இது சம்பந்தமாக குறிப்பிடுகையில் "ருஷ்டி தனது தவறுக்காக கொல்லப்பட்டால் நாங்கள் எங்களுடைய தவறுக்காகக் கொல்லப்பட வேண்டும்" என்றார்.

இத்தனை நடந்தும் எமது இலங்கையில் உள்ள எழுத்தாளர் எவரும் இதற்கு எதிர்ப்புக் காட்டியதாய் இல்லை. காரணம் என்ன? அவர்கள் எதிர்ப்புக் காட்டியும் பத்திரிகைகள் பிரசுரிக்கவில்லையா ?

ஒரு புத்தகம் எதற்காக தடைசெய்யப்படுகிறது? அதற்கெதிராக எழுதி அதை நிராகரிக்க முடியாமல் போகும் போதே இது ஏற்படுகிறது. ஒரு புத்தகம் பொய்யானது எனின் அதற்கெதிராக ஏதும் எழுதப்படாமலே காலகதியில் சமூகத்தால் அது புறக்கணிக்கப்பட்டுவிடும்.

இலங்கை எழுத்தாளன் என்ற ரீதியில் எனது எதிர்ப்புக்குரலின் பலம் எத்தகையதாக இருந்தாலும், ருஷ்டியின் மரண தண்டனைக்கு எதிரான எதிர்ப்பில் நானும் எனது பங்கைச் சேர்த்துக் கொள்கிறேன். (இவரது எதிர்ப்பு மூன்று முக்கிய சிங்கள (சுயாதீன வெளியீடு) பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டும், அவை பிரசுரிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.)

சென்னை உயர்நீதிமன்ற பிரதம நீதிபதி இஸ்மாயில் அவர்கள் இது பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில், "ருஷ்டியின் நூலில் முகமது நபி (ஸல்) அவர்களுக்கோ, குர்ஆன் இற்கோ எதிரானவை இருந்தாலும், ருஷ்டியைக் கொல்லும்படி உலகிலுள்ள முஸ்லிம்களை கொமேய்னி கேட்க முடியாது. ஏனெனில் ஒவ்வொரு முஸ்லிமும் தத்தமது நாடுகளின் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவராவர். ஆகவே கொமேய்னியின் கட்டளை இஸ்லாம் சட்டமும் அல்ல நீதியுமல்ல" என்றார்.

□ □

இந்திய முஸ்லிம் லீக் தலைவர், ஜி. எம். மனற்வாலா "ருஷ்டியின் நூல் குற்றமுடையதாக இருந்தாலும்; அதற்காக ஒருவரைக் கொலை செய்யச் சொல்வது எல்லா வரையறைகளையும் மீறுவதாகும்" என்றுகூறியுள்ளார்.

□ □

சென்னை நியூகொலேஜ் ஆங்கிலப் பேராசிரியர் எம். ஏ. லத்தீவ் பின்வருமாறு கூறுகிறார். "எங்களுடைய மனதிலுள்ளதைத்தான் கொமேய்னி வெளிக்காட்டியுள்ளார். ருஷ்டி சென்னையில் இருப்பாரானால் நான் அவரைக் கொல்வதில் முதலாளாக இருந்திருப்பேன். இப்பொழுது ஏன் அவர் ஒளிந்து கொள்ள வேண்டும் ? உயிருக்குப் பயந்தவர் இதையெல்லாம் எழுதக்கூடாது."

இதே கல்லூரியைச் சேர்ந்த இன்னொரு ஆங்கிலப் போராசிரியரான கெயித் அமீறுடீன், "ருஷ்டியின் செயல் பொறுத்துக் கொள்ளக் கூடியதல்ல. கொமேய்னி செய்தது சரி என்றுதான் சொல்ல வேண்டும்" என்றார். ஆனால் இரு பேராசிரியர்களும் ருஷ்டியின் நூலைப் படிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

□ □

இலங்கை ஜமாத் இஸ்லாமிய அமைப்பின் பொதுச் செயலாளர் எம். ஐ. ஷெறிவ், இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், இந்நூல் எழுதப்பட்டதும், வெளியிடப்பட்டதும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான சர்வதேச ரீதியிலான ஒரு சதி என்றும், ஸியோனிஸ வாதிகளின் வேலை என்றும் அதனால் கொமேய்னியின் தீர்ப்பு நியாயமானதென்றும் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

சவூதி அரேபியாவில் கூடிய 46 இஸ்லாமிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மகாநாடு. 'சாத்தானின் செய்யுள்கள்' என்ற நூலை எழுதி முகம்மது நபி (ஸல்) அவர்களையும், இஸ்லாம் மதத்தையும் நிந்தனை செய்ததற்காக, அதன் நூலாசிரியர் சல்மான் ருஷ்டிக்கு மரணதண்டனை வழங்க வேண்டும் என ஈரானியத் தலைவர் அயதொல்லா கொமெய்னி பிறப்பித்த ஆணையை நிராகரித்தது.

இஸ்லாமிய மதத்தினை அவமதிக்க வேண்டும் என்ற நோக்குடன்தான் இந்த நூல் எழுதப்பட்டிருப்பதாக மகாநாடு கருதியபோதும் மரணதண்டனை ஏற்றுக்கொள்ள முடியாதென அது அறிவித்தது □

---

## ஜே. கிருஷ்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இதுவரையிலான கடவுட் கொள்கைகளையும், ஆத்மீகக் கோட்பாடுகளையும், அவற்றின் வழிமுறைகளையும் ஒட்டுமொத்தமாக அவர் நிராகரிக்கும்போது, மீண்டும் ஒரு சந்தேகம்; பேர் ஞானிகளின் 'வெளிப்பாடுகளை' உண்மையாகவே அவர் படித்துள்ளாரா அல்லது புரிந்துகொண்டுள்ளாரா என்று. அவர் பேச்சுக்களும் உரையாடல்களும் அவர் தன் வாழ்நாள் முழுவதும் முற்றுணர்ந்த பேர் ஞானி எவரையும் நேரடியாகச் சந்திக்கவில்லை என்பதையே காட்டி நிற்கின்றன. அவ்வாறானல் எவ்வாறு இதுவரையிலான ஆத்மீகக் கோட்பாடுகள் எல்லாவற்றின் மீதும் ஒட்டுமொத்தமான 'மறுதலிப்பு' தீர்ப்பை அவர் வழங்கி நிற்கலாம? □

# வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் கரையோரப் பாதை

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு வரை கரையோரமாக நேரடிப் போக்குவரத்து வீதியும், புகையிரத வீதியும் அமைக்கப்பட வேண்டும்.

வடக்கையும், கிழக்கையும் எல்லாவகையிலும் இரண்டுபட்ட பிரதேசங்களாகப் பிரித்து விடுவதற்கு, காலங்காலமாகச் சிங்களத் தலைவர்கள் எல்லாவகையிலும் முயன்று வந்துள்ளனர். இந்த வகையின் திட்டமிட்டு, கரையோரயாக நேரடி வீதி வடக்குக்கும் கிழக்குக்கும் இடையில் அமைந்து விடாது பார்த்துக் கொண்டனர்.

இப்பொழுது வடக்கு,கிழக்கு மாகாண அரசு. உடனடியாகவே இவ்வாறான போக்குவரத்து வீதியும், புகையிரவீதியும் யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்குமிடையில் கரையோரமாக நேரடியாக அமைந்திட நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்திய அரசும் இதுவிடயத்தில் கூடிய கவனம் செலுத்திச் செயற்பட வேண்டும்.

வடக்குக்கும் கிழக்குக்கும் இடையில் நேரடியான பௌதிகரீதியான இணைப்பு அவசியமாகும். உண்மையில் வடக்கும் கிழக்கும் தொடர்ச்சியான ஒரு நிலப் பிரதேசமாகும். வடக்கும் கிழக்கும் ஒரே பிரதேசமே; இதில் இணைப்பு என்ற சொல்லிற்கே இடமில்லை. வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியான ஒரு பிரதேசத்தை கொண்டுள்ளனர்.

ஆங்கிலேயர் நிர்வாக வசதிக்காக, இலங்கையை ஒன்பது மாகாணங்களாக வகுத்தனர். அப்போது வடக்கையும் கிழக்கையும் இரு மாகாணங்களாக்கினர். இதனை நிர்வாக வசதிக்காகவே அவர்கள் செய்தனர். ஆனால் வடக்கும் கிழக்கும் ஒரே பிரதேசத் தொடர்ச்சியையும் ஒரே மொழி, ஒரே பண்பாட்டுக் கூறினையும் கொண்டுள்ளன. எனவே வடக்கும் கிழக்கும் ஒன்று தான்; இரு இரண்டல்ல. ஆகையால் இணைதலுக்கான சர்வசனவாக்கெடுப்பு என்ற சொல்லிற்கே இடமில்லை. ஒரே மொழியைப் பேசுகின்ற, ஒரே பிரதேசத்தைக் கொண்டுள்ள, ஒரே பண்பாட்டுக் கூறுடையோரை இங்கு இரண்டாகப் பிரிப்பது தான் பிழை. நிர்வாக வசதிக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு மாகாண அமைப்பை வைத்துக் கொண்டு, ஒரே பண்பாட்டுக் கூறுடையோரை இரண்டாகப் பிரிப்பதற்கு முயல்வது மாபெரும் ஒடுக்கு முறையே. எனவே வடக்கு - கிழக்கு இணைப்புக்கான சர்வசன வாக்கெடுப்பு என்பதும், ஓர் ஒடுக்குமுறை சார்ந்த அம்சமே.

இணைப்பு, இணைப்பு என்று வாயால் பேசிக் கொண்டிருப்பதில் முழு நேரத்தையும் வீணாக்காது செயல் பூர்வமாக வடக்கு - கிழக்குக்கு இடையில் நேரடிப்பாதை அமைக்க சகலரும் உழைக்க வேண்டும். இவ்வாறு வீதி, புகையிரத வீதி அமைக்கும் நடவடிக்கைக்கு முழு முக்கியத்துவத்தை வடக்கு - கிழக்கு மாகாண அரசும், இந்திய அரசும் கொடுக்க வேண்டும்.

**விடாக்கண்டன்**

இவ்வாறு வீதி அமைப்பதற்கு என்ன சாட்டுக்களைச், சட்டப் பிரச்சினைகளை இலங்கையின் மத்திய அரசு சொல்ல முடியும்?

சிங்கள மக்கள் கண்டிச் சிங்களவர் என்றும், கரையோரச் சிங்களவர் எனவும் இரு கூறுகளாக மாறிக் கொண்டு வந்தனர். 19ஆம் நூற்றாண்டில் கொழும்பு - கண்டிவீதி அமைக்கப்பட்டதனால் மலைப் பிரதேசமும் கரையோரப் பிரதேசமும் பண்பாட்டு ரீதியாக ஒன்றிணைந்தன. வீதி அமைக்கப்பட்ட பின், படிப்படியாக இந்த ஒன்றிணைவு அங்கு வளர்ந்தது.

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிகளிற் கூட கண்டிச் சிங்களவர், தம்மைக் கரையோரச் சிங்களவரிலிருந்து வேறுபட்ட ஒரு பண்பாட்டுக் கூறினராக அடையாளம் காண விரும்பினர். கரையோரச் சிங்களவர் அதனை மறுத்தனர். 1925ஆம் ஆண்டு கண்டியர் தேசிய சபை எனும் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் அவர்கள் தமக்கெனத் தனியான ஒரு மாநில அரசு கோரினர். அப்போது கரையோரச் சிங்களத் தலைவர்கள் அதனையெல்லாம் மறுத்து ஒன்றிணைந்தனர்; மலையகத்திற்கும், கரையோரத்திற்கும் இடையிற் தொடர்புகள் வளர்ந்து ஒரே பண்பாட்டுக் குழுமமாகினர். அடிப்படையில் கரையோரச் சிங்களவரும் கண்டிச் சிங்களவரும் ஒரே மொழி மத அம்சங்களைக் கொண்டிருந்ததால் காலகதியில் வேற்றுமைகள் நீங்கி, ஒற்றுமைகள் முதன்மை பெற்றன.

1925ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஒரு சர்வசன வாக்கெடுப்பினைக் கண்டியில் நடாத்த கரையோரச் சிங்களத் தலைவர்கள் ஏன் தயாராய் இருக்கவில்லை?

ஆனால், இதிலிருந்து கூட எமது நிலை வேறுபட்டது, கிழக்கு மாகாணம், திட்டமிடப்பட்டு சிங்களக் குடியேற்றங்களிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு குடியேற்றப்பட்ட சிங்களச் சனத்தொகையை வைத்துக் கொண்டு கிழக்கு மாகாணத்தைப் பல்லினப் பிரதேசம் என்று கூறுகின்றனர். அந்தக் குடியேற்றங்களை வைத்துக் கொண்டும் அங்கு வேறுபல அரசியற் சதிகளைச் செய்து கொண்டும், சர்வசனவாக்கெடுப்பை நடத்தி கிழக்கை வடக்கிலிருந்து பிரித்துத் தனிமைப்படுத்தி, காலகதியில் இரண்டையும் படிப்படியாக அழித்துவிட விரும்புகின்றனர்.

சர்வசன வாக்கெடுப்பில் எமக்குச் சாதகமான தீர்ப்புக் கிடைக்கலாம். ஆனால் இங்கு அவ்வாறு ஒரு வாக்கெடுப்பை நடாத்துவது என்பது, எமது உரிமையை மீறும் செயலாகும். நாம் ஒரு தேசிய இனம். எமக்குப் பிரதேச ஒருமைப்பாடும், தேசிய ஒருமைப்பாடும் உண்டு. இந்த சர்வசனவாக்கெடுப்பு என்பது எமது பிரதேச ஒருமைப்பாடு, தேசிய ஒருமைப்பாடு என்னும் உரிமையை மீறுகிறது.

மேற்குறிப்பிட்டவாறான போக்குவரத்து வீதி, புகையிரத வீதி அமைம்பு தமிழ்ப் பிரதேசங்களிடையே பிரதேச ஒருமைப்பாட்டையும், தமிழ் தேசிய ஒருமைப்பாட்டையும் வளர்க்க அத்தியவசியமான முற்தேவை ஆகும்.

தமிழ் மக்களின் அரசியலில் கடந்த காலம் முழுவதும், நடைமுறை சார்ந்த அறிவியற் கண்ணோட்டம் இருந்ததில்லை. இனியாவது சற்று அறிவியல் கலக்குமா? □

# கரும் பூனைகள்: இதிலும் அமெரிக்காவின் கை

தென்னிலங்கை அரசியலில் இன்று இரத்தம் கொப்பளிக்கின்றது. கடந்த மாதம் அனுராதபுரத்தில் ஒரே இரவில் 63 இளைஞர்களின் சடலங்கள் தெருக்களில் கிடந்தன. அதற்கு கரும்பூனைகள் உரிமை கோரின. இம்மாதம் 19ஆம் திகதி அதே மாவட்டத்திலும் வேறு சில இடங்களிலும் 40க்கு மேற்பட்ட இளைஞர்கள் ஒரே இரவில் கொல்லப்பட்டனர். அதற்கும் கரும்பூனைகள் உரிமைகோரின.

மறுபுறம் ஜே. வி. பி. அல்லது டி. ஜே. வி. என்னும் இயக்கங்களின் தாக்குதல்கள். இவர்களால் இம்மாதம் நான்கு பொலிஸ் நிலயங்கள் தாக்கப்பட்டுள்ளன. பொலிஸ் ரோந்து வாகனத்தின்மீது நிலக் கண்ணிவெடித் தாக்குதல், அரசியல் பிரமுகர்கள், அவர்களின் ஆதரவாளர்கள் கொலை என்பன நிகழ்கின்றன.

ஒரே நாளில், நேரடித்தாக்குதல் மூலம், ஆட்சியைக் கைப்பற்றுதல் என்னும் கோட்பாட்டைக் கொண்டிருந்த ஜே. வி. பி. அதனடிப்படையில் 1971ஆம் ஆண்டு தாக்குதலை நடாத்திப் படுதோல்வி அடைந்தது. இதன் பின்பு வடபகுதியில் ஏற்பட்ட கெரில்லாப் போராட்ட முறைகள் ஜே. வி. பி. க்குப் பல அனுபவங்களைக் கொடுத்தன. வடபகுதிப் பாணியினைப் பின்பற்றி, அதனை விடவும் தீவிரமாக அம்முறையினை ஜே. வி. பி. கைக்கொள்கிறது. அதேபோல அரசும், வடபகுதியில் பெற்ற நேரடி அனுபவங்களை இரட்டிப்பாக தென்னிலங்கையிற் கையாள்கிறது.

அரசாங்க சார்பு ஆசியல் வாதிகளைக் கொல்லுதல், வங்கிக் கொள்ளை, பொலிசாரைக் கொல்லுதல், பொலிஸ் நிலையங்களைத் தாக்குதல், நிலக் கண்ணிவெடித் தாக்குதல், இராணுவத்தினர்மீதும் அவர்களது முகாம்மீதுமான தாக்குதல் என வடபகுதிப் பாணித் தாக்குதல் உருப்பெற்றது. இப்பாணியினைப் பின்பற்றி ஜே. வி. பி. துரித வளர்ச்சி அடைந்துள்ளது. இம்மாதம் 19ஆம் திகதி அனுராதபுரத்தில் பொலிஸ் வாகனத்தின் மீது ஜே. வி. பி. நிலக்கண்ணிவெடித் தாக்குதலை நடத்தி அதில் வெற்றிகண்டுள்ளது. இனி நிலக்கண்ணி வெடித்துறையில் அவர்கள் வடபகுதி போல் கைதேர்ந்தவர்கள் என்பதிற் சந்தேகமில்லை.

வடமத்திய மாகாணத்திற்கு எஸ். பி. ஆகப் பணிபுரியும் உடுகம்பொல என்பவர் பின்வருமாறு சூளுரைத்துள்ளார். அதாவது, மூன்று மாத காலத்துள் வடமத்திய மாகாணத்திலிருந்து நாசகாரர்களை வழித்துத் துடைத்து விடுவாராம். 1979ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பிறிகேடியர் வீரதுங்கா வெள்ளை வேட்டி அணிந்துகொண்டு யாழ். புகையிரத நிலையத்தில் வந்திறங்க, யோகேந்திரா துரைச்சாமி பூமாலையுடன் அவரை வரவேற்க பின்வருமாறான சூளுரையுடன் அவர் யாழ். மண்ணிற் கால் வைத்தார். அதாவது, மூன்று மாதத்தில் வடபகுதிப் பயங்கரவாதத்தை அடியோடு வழித்துத்துடைத்து விடுவதாகக் கூறிக்கொண்ட, வீரதுங்காவிற்கும் உடுகம்பொலவுக்கும் என்னே ஒற்றுமை!

**கணநாதன்**

இறுதியாகத் தனது கொலைப் பயங்கர நடவடிக்கைகள் மூலம் வீரதுங்கா சாதித்ததென்ன? இயக்கங்களுக்குத் தீவிரமாக ஆள்சேர்த்துக் கொடுத்தமைதான். வடபகுதியில் அரசு கைக்கொண்ட அதே பாணியை. அப்படியே இன்று அது தென்பகுதியில் கைக்கொள்கின்றது.

ஈரானிய மன்னன் ஷா தனது எஜமானான அமெரிக்கரின் ஆலோசனைப்படி சவாக் எனப்படும் இரகசியப் பொலிஸ் படையொன்றை அமைத்தான். அவசரக்காலச் சட்ட விதிகள் என்பவற்றின் துணை இல்லாமல், சாதாரண சட்டச் சூழலில் தனது அரசியல் எதிரிகளைக் கொல்லும் வித்தையில், இப்படை பாண்டித்தியம் பெற்றது. அதாவது புலனாய்வுப் பிரிவினர் தயாரிக்கும் பட்டியலை 'சவாக்' படையினர் பெற்று, வெள்ளை உடுப்பிற் சென்று அப்பட்டியலில் உள்ளவர்களைக் கொலை செய்வர். இதன் பின்பு, "அடையாளம் தெரியாத நபர்களால் இவர் கொல்லப்பட்டுவிட்டதாகவும், அதனைக் கண்டு பிடிப்பதில் பொலிசார் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அரசு அறிவிக்கும்." தனது சிஷ்யப் பிள்ளையாகிய மார்க்கோசிற்கும் அமெரிக்கா இந்த ஆலோசனையை வழங்கத் தவறவில்லை. இவ்வாறு அவசரகால விதிகளின்றிக் கொலை செய்யும் வித்தையை, அமெரிக்கா மூன்றாம் உலகின் சில நாடுகளில் முதலிற் பரிசோதித்தது. இந்த ஆலோசனையை தனது ஆத்ம நண்பர்களுக்கு அமெரிக்கா வழங்கத்தயங்காது, ஏனைய மூன்றாம் உலக நாடுகளுக்கும் இப்பாணி பரவுகின்றதா என்ற ஐயம் எழுகிறது.

பச்சைப் புலிகள் என்றும், கரும் பூனை என்றும் கொலைக் கும்பல்கள் தென்பகுதியில் செயற்படுகின்றன. இவற்றிற்கும் பொலிஸ், மற்றும் இராணுவத்திற்கும் இடையிற் தொடர்பிருப்பதாகப் பேசப்படுகின்றது. ஆனால் இதனை அரசு வன்மையாக மறுத்துள்ளது. கரும்பூனைகளுக்கும் பொலிசாருக்கும் இடையிற் தொடர்பிருப்பதாக பேசப்படுகிறதே என ஒரு பத்திரிகையாளர் உடுகம்பொலவிடம் கேட்டபோது, அப்படி ஒரு வதந்தி இருப்பதைத் தான் அறிவதாகவும், ஆனால் பொலிஸாரிற்கும் கரும் பூனைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், கூறியுள்ளார்.

முசோலினி, 'மண்ணிறச் சட்டை (பிறவுண் சேட்) எனும் ஒரு பொலிஸ் பிரிவை வைத்திருந்தான். ஹிட்லர் கறுப்புச்சட்டை (பிளாக் சேட்) என்னும் ஒரு பொலிஸ் பிரிவை வைத்திருந்தான். இவை அரசியல் எதிரிகளைக் கச்சிதமாகக் கொலை செய்யும் குழுக்கள். ஆனால் இறுதியில் முசோலினியும், ஹிட்லரும், ஷாவும், மார்கோசும் என்ன ஆயினர்?

(11ஆம பக்கம் பார்க்க)

# எழுத்தாளர்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வொரு விதமான கவிதைக்கும் ஒவ்வொரு விதமான அமைப் புண்டு என்று கூறி, நல்ல கவிதைகளையும், நல்லதாக அல்லாத கவிதைகளையும் உதாரண மூலம் சுவையாக வேறுபடுத்திக் காட்டி விளக்கினர். அதன் பின்னர் 'மஹாகவி'யின் புள்ளி அளவில் ஒரு பூச்சியை என். சண்முகலிங்கம் வாசித்துக்காட்டி அதில் ஒரு கவிதைக்குரிய கட்டமைப்பும் மொழிப் பிரயோகமும் எவ்வாறு அமைந்துள்ளதென விளக்கினர். அவ்வமயம் மௌனகுருவினல் சண்முகம் சிவலிங்கத்தின் ஆக்காண்டிப் பாடலும் வாசித்துக் காண்பிக்கப் பட்டது.

பின்னர் உரையாற்றிய அ. சண்முகதாஸ் கவிதையில் மொழியைக் கையாளுதல் பற்றிப் பேசினர். கவிதை மொழி தற்காலக் கவிஞர்கள் சிலரினல் பிழையாகக் கையாளப் படுவதை உதாரணங்களுடன் இவர் விளங்கினர்.

அடுத்து அனுபவத்தை எவ்வாறு கவிதையாக்குகிறேன் என்ற தலைப்பில் அ. யேசுராசா பேசினர். தன்னுடைய இரண்டு கவிதைகளை வாசித்துக்காட்டி எந்தெந்த அனுபவம் தனக் அக்கவிதைகள் எழுதத் தூண்டுகோலாயின என்றும், அக்கவிதைகளின் படிமங்கள் வர எச்சிந்தனைகள் காரணமாயின எனவும் விளக்கினர். நுஃமானும், தான் அனுபவத்தைக் கவிதையாக்கும் விதத்தினைக் குறிப்பிட்டார்.

பின்னர் என். சண்முகலிங்கத்தினல் கவிதை எழுதுவதற்கான சில முன்னறிவிப்புகள் கொடுபட்டன. இரவுச் சாப்பாட்டுக்குப் பின்னர் 9.15 வரை கவிதை யோகம் நடைபெற்றது. எழுதிய கவிதைகளினுள் 5 நல்ல கவிதைகள் தெரிவும் பட்டன.

மறுநாள் வழமைபோல நிகழ்வுகள் ஆரம்பமாயின. 8.00 மணி அளவில் வானொலி எழுத்துக்கள் பற்றி கரவையூர் செல்வம் உரை நிகழ்த்தினர். வானொலி என்ற ஊடகத்தின் நுட்பங்களை வலியுறுத்திய அவர் அதற்கு எழுதும் முறைகளையும் விளக்கினர். அடுத்து பத்திரிகை எழுத்துக்கள் என்ற தலைப்பில் பேசிய 'முரசொலி' ஆசிரியர் எஸ். திருச்செல்வம் பத்திரிகையின் தொழில் நுட்பங்களை விளக்கி, தாம் எத்தகைய படைப்புக்களை எதிர்பார்க்கின்ருரென்றும் கூறுனர். பின்னர் எழுத்தாளர்களும் மொழியும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் மொழிப் பயன்பாட்டின் அவசியத்தை பல உதாரணங்களுடன் கனதியாக விளக்கினர். எழுத்தாளர்களும் வாசிப்பும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய திருமதி சித்திரலேகா மௌனகுரு சகஎழுத்தாளர்களின் எழுத்துக்களை வாசிப்பதுடன், பரந்துபட்ட அறிவியற்துறைசார் வாசிப்பு எழுத்தாளனின் எழுத்திற்கு கனதியூட்டும் என்ருர்.

கருத்தரங்கு முடிவில் பயிற்சியின் போது தெரியப்பட்ட சிறுகதையும், கவிதைகளும் எழுத்தாளர்களினல் வாசிக்கப் பட்டன. பயிற்சியாளர்களின் அபிப்பிராயங்கள் பரிமாறப் பட்டன. கடந்த கலவரங்களின் காரணமாக தாய், தந்தை, உற்ருர் இழந்த அனைதச் சிறுவர்கள் இருக்கும் அன்பகத்திற்கு எழுத்தாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு அக்குழந்தைகளுடன் அளவளாவி அவர்களின் துயரம் மிகுந்த சோக அனுபவங்களையும் இளம் எழுத்தாளர்களுடன் முதிர்ந்த எழுத்தாளர்களும் பெற்றுக் கொண்டனர்.

இறுக்கமான கட்டுப்பாடான ஒழுங்கு முறைகளுக்குள் 3 நாட்கள் இருந்தாலும் தாங்கள் அறிவு ரீதியாகவும், அனுபவரீதியாகவும் பெற்ற பயன்கள் அதிகம் என்பதை பயிற்சி பெற வந்த அனைவரும் உணர்ந்தனர். அனுபவமே இலக்கியமாக்கப்பட வேண்டும் என்பதும், மொழிப்பிரயோகத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதும், இலக்கியம் பற்றிய அறிவு தேவை என்பதும், வாசிப்புப் பயிற்சி அவசியம் என்பதும் அனைவருக்கும் உணர்த்தப்பட்டன.

நிகழ்ச்சி முடிந்துசெல்கையில் ஒருவித 'பிரிவு' உணர்வுடனேயே அனைவரும் சென்றனர். செல்கையில் ஒரு முதிர்ந்த எழுத்தாளர் கூறினர். "இது எங்களுக்கும் பிரயோசனம் தந்த எழுத்தாளப்பட்டறை" □

---

சென்ற இதழ் கலைச்சாரலில் வெளிவந்த 'பரிச்சயமின்மையால் எதிர்க்கப்படும் நவீன ஓவியங்கள், சிற்பங்கள்' என்ற கட்டுரைத் தொடர்ச்சி தவறுதலாக விடுபட்டு விட்டது. அதனை இங்கு தருகிரேம். தவறுக்கு வருந்துகிரேம்.

— ஆசிரியர்

---

டினர்கள். ராஜரவிவர்மா இந்திய புராணங்கள், இதிகாசங்கள், கதைகள் ஆகியவற்றில் இருந்து தனது ஓவியத்தைப் படைத்தார். அது நாட்டு மக்களிடையே அவருக்குச் செல்வாக்கை உண்டாக்கியது. ஆனல் இந்திய ஓவியம் என்பது மரபு, சிந்தனை, படைப்பு ஆகியவற்றை இந்தியத் தன்மைகளைக் கொண்டு இருக்க வேண்டுமென்று ஆனந்த குமாரசுவாமி, இ. பி. ஹேவல் போன்றவர்கள் எழுதினர்கள். வங்காளத்தில் டாக்டர் அபினேந்திரநாத் தாகூர், ஜாமினிராய், நந்தலால் போஸ் நவீன வங்க மரபு சார்ந்த ஓவியத்தைப் படைத்துவளர்த்தார்கள். இந்திய சுதந்திரப் போராட்டம் நாடு முழுவதற்கும் அதனை எடுத்துச் சென்றது.

ஆனல் நவீன ஓவியர்களுக்கு கலை என்பது சொல்லப் பட்டதையே திரும்பச் சொல்வது என்பது, ஏற்புடையதாக இல்லை. எனவே நவீன ஓவியம், நவீன சிற்பம் என்பது அதன் எல்லா அம்சங்களிலும் நவீனமாக இருக்கவேண்டும் என்ற சிந்தனையோடு செயல்பட்டார்கள். அதன் காரணமாக இந்தியாவின் எல்லாப்பகுதிகளிலும் நவீன ஓவிய முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. அதனல் இந்திய நவீன ஓவியம், மரபின் தளைகளற்றுப் புதிதாகத் தோன்றியது. அது ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்துக்களையும், பொருட்களையும், சிந்தனைகளையும் உதறிவிட்டு புத்தம் புதிதாக இருந்தது. அதோடுகூட சிதைத்தும் குறைத்தும், சொல்லப்படாத கோணத்தில், காட்டியது. ஆரம்ப காலத்தில் அதற்கெல்லாம் நிறைய எதிர்ப்பு இருந்தது. ஆனல் கலைஞர்களும், சில கலை விமர்சகர்களும், அகாடமிகளும் தொடர்ந்து உதவி நல்கிய படியால் நவீன ஓவியம், சிற்பம் மக்களிடையே சென்று அவர்களின் அன்புக்கு உகந்த கலையாகி விட்டது. அதற்குக்காரணம் நவீனக்கலை என்பது, மக்கள் கலையாக இருப்பதுதான். ஆனல் அதை அடைய ஓரளவு சிரமப்பட வேண்டியிருந்தது. இந்தியாவின் தலைசிறந்த சிற்பிகளில் ஒருவரான ராய் சௌத்திரி உருவாக்கிய 'மகாத்மா காந்தி சிலை' சென்னைக் கடற்கரையில் வைக்கப்பட்ட பொழுது, அது காந்தி மாதிரியே இல்லையெனக் கூக்குரல் எழுப்பப்பட்டது. சிலை என்பது வெறும் முகம், கை, கால் உருவ அமைப்பு என்பதுதான் என்ற மரபு ரீதியில் எழுந்த கருத்து. அது. ஆனல் மகாத்மா காந்தியின் ஆத்மாவாக அவரின் உயிர்த்துடிப்பு, வேகம், கம்பீரம் ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாக சிற்பம் வடிக்கப்பட்டிருப்பதை, பின்னலேயே உணர முடிந்தது. இன்று மகாத்மா காந்தி சிலை மதிப்பு மிகுந்த சிற்பமாகி விட்டது.

நன்றி: நுண்கலை

# கறுப்பு பூனை

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரலாறு அவர்களை எங்கே கொண்டு போய் விட்டது? இந்த பிளாக்குகளும், பிறவுண்களும் கிறீன்களும் சகாக்களும் சவக்குழிகளில் நிரந்தர இழிவுடன் சங்கமமாயின என்பதை, வரலாறு காட்டுகிறது.

சிங்கள 'அரசியல்வாதிகள் தமது குறுகிய அரசியல் அதிகார இலாபங்களுக்காக இனவாதம், இந்திய எதிர்ப்பு வாதம் என்பவற்றைப் பேசினர். இவை இளைஞர்களின் மனதில் உறைந்து விட்டன. சிறு பராயத்திலிருந்தே வளர்க்கப்பட்ட இந்த உணர்வு, இன்று இளைஞர்களின் நெஞ்சங்களில் கனன்று எரிகின்றது. நாளும் பொழும் பொருளாதாரப் பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. ஒன்றுடன் ஒன்று இணைந்து சுவாலைவிட்டு எரியும் இந்த இழிநிலைக்கு சிங்கள இனவாத அரசியல்வாதிகளே முழுப் பொறுப்பு. □

---

நீதிபதி எனக்கு 200 ஆண்டு சிறைத்தண்டனை கொடுத்தார். அதிர்ஷ்டவசமாக ஆயுள்தண்டனையில் இருந்து தப்பிவிட்டேன்.

O O

"கள்வன் உன்னை எழுப்பவில்லையா?"

"இல்லை...... அவன் மிக அமைதியாக பொருட்களை எடுத்துச் சென்றுவிட்டான்."

O O

"இறுதிப் பரீட்சை தொடங்குவதற்கு முன், ஏதாவது கேள்வி கேட்க விரும்புகிறீர்களா?"

"ஸேர் ..... இது என்ன பாடம்......?"

# நிகழ்வுகள்!

## 15-3-89 புதன்

முல்லைத்தீவில் இரவு ஏழு மணியளவில் திடீரென மோதல்கள் இடம்பெற்றன. ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன □ கொழும்பில் கிரிலப்பனை பொலிஸ் நிலையத்தையும், நாரம்மல பொலிஸ் நிலையத்தையும் தீவிரவாதிகள் தாக்கினர். ஆயுதங்கள் பல கொள்ளையடிக்கப்பட்டன □ யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு சென்ற மினிபஸ் புதுக்குடியிருப்பருகில் குடைசாய்ந்ததில் பத்துப் பயணிகள் காயமடைந்தனர் □ புத்தளம் நகருக்கு அண்மையிலுள்ள மணல்குண்டு என்னுமிடத்தில் முஸ்லிம்களின் 193 குடிசைகள் சிருடையில் வந்தோரால் எரிக்கப்பட்டன □

## 16-3-89 வியாழன்

மன்கும்பானில் முஸ்லிம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது □ ஐந்து வருடங்களின் பின்னர் இலங்கைப் பொலிசார் யாழ்ப்பாண வங்கிக் கிளைகளில் சிருடையில் காவல் புரிந்தனர் □ முல்லைத்திவு மாவட்டத்தில் நாயாறு பகுதியில் 10,000 இந்தியத் துருப்புகள் விடுதலைப் புலிகளுடனன யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் □ மாத்தறையில் சுதுவெல என்ற இடத்தில் நிலக்கண்ணிவெடித் தாக்குதலில், இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர்; 5 பொலிசார் படுகாயமடைந்தனர் □ பிரதமரும் நிதியமைச்சருமான டி. பி. விஜேதுங்க வரவுசெலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார் □ அம்பன் பொல, மத்துகம பொலிஸ் நிலையங்கள் அதிகாலை தாக்கப்பட்டன □

## 17-3-89 வெள்ளி

முல்லைத்தீவுப் பகுதியில், விடுதலைப் புலிகளுக்கெதிராக அமைதிப்படையினரைப் பெருந்தொகையாகக் குவிக்கும் முயற்சிகளையிட்டு தனது, கவலையையும் அதிருப்தியையும் ஈழவர் ஜனநாயக முன்னணி ராஜீவிற்கும், கருணாநிதிக்கும், ஜனதிபதிக்கும் அறிவித்துள்ளது □ கரவெட்டிப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடைபெற்றது □ மட்டுவிலில் இரு பகுதியினருக்கிடையில் நடந்த மோதலில் ஓர் இளைஞர் சூட்டுக்கிலக்காகி மரணமடைந்தார் □ மூன்று மாத கால பகிஷ்கரிப்பின் பின்னர் வட – கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் கொங்கிரஸ் உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்தனர் □

## 18-3-89 சனி

யாழ். நோக்கி வந்த காரொன்று ஓமந்தைப் பகுதியில் வழி மறிக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டது □ புத்தளத்தில் முஸ்லிம்களின் வீடுகள் எரிக்கப்பட்டதைக் கண்டித்து, ஈரோஸ் அறிக்கையொன்றை வெளியிட்டது □ யாழ். மாவட்டத்தில் சில பகுதிகளில் மலேரியா பரவுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது □ யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 50 ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரி வெற்றிபெற்று ராஜன் கதிர்காமர் கேடயத்தைச் சுவீகரித்தது □

## 19-3-89 ஞாயிறு

புலோலி புற்றளையில் இடம்பெற்ற சுற்றிவளைப்பினல் திடீர் பதற்றம் ஏற்பட்டது. இதில் மூன்று இளைஞர்கள் மரணமானர்கள் □ வடபகுதி செஞ்சிலுவைச் சங்கத் தலைவராக டொக்ரர் இ. தெய்வேந்திரன் மீண்டும் தெரியப்பட்டார் □ அநுராதபுர மாவட்டத்தில் எப்பாவலையில் நிலக்கண்ணிவெடியில் மூன்று பொலிசார் மரணமடைந்தனர். 6 பேர் காயமடைந்தனர் □

## 20-3-89 திங்கள்

இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவை மூடிவிடுமாறு சபாநாயகர் எம்.எச். முகம்மட் கேட்டுள்ளார் □ கிராமசேவகரான திருநாவுக்கரசுவின் சடலம் சூட்டுக் காயங்களுடன், தண்ணீரூற்று – நெடுங்கேணிச் சந்தியில் கிடக்கக் காணப்பட்டது □ இரவு, திருநெல்வேலியிலுள்ள நான்கு வீடுகளில் ஆயுதபாணிகளாக வந்த 10 இளைஞர்கள் கொள்ளையடித்துச் சென்றனர் □ மட்டக்களப்பில் கல்லடி, நாவற்குடா, மஞ்சத்தொடுவாய், பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது □

## 21-3-89 செவ்வாய்

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த மினிபஸ் மீது ஹொரவுப்பொத்தானை வீதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் பயணிகள் மூவர் காயமடைந்தனர் □ தென்பகுதித் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களைக் கைது செய்ய 3 மாத காலக்கெடுவை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின விதித்துள்ளார் □ வட- கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் ராஜீவ் காந்தியை புதுடெல்லியில் சந்தித்துப் பேசினர் □ கட்டுவன், ஏழாலைப் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டுத் தீவிர தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன □

திசை
THISAI

# தெற்கிலும் வடக்கிலும் தாக்குதல்கள் தற்செயல் நிகழ்வுகளா?

தென்மாகாணத்தில் அரசாங்கம் ஜே. வி. பியினர் மீது பயங்கரத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

தேடுதல் வேட்டைகள், சுற்றிவளைப்புக்கள், ஆகியவற்றின் மூலம் 10,000 க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

இதே வேளை முல்லைத்தீவு மாவட்டத்திலும் பாரிய தாக்குதல்களை அமைதிப்படையினர் மேற்கொண்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. இத்தாக்குதல்களின் விளைவாக ஆயிரக்கணக்கான முல்லைத்தீவுப் பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து, வவுனியா போன்ற இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

பருத்தித்துறை, கொக்குவில் போன்ற இடங்களிலும் கெடுபிடிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இத்தகைய இராணுவ நடவடிக்கைகளை நோக்கும்போது, இவை தற்செயல் நிகழ்வுப் பொருத்தங்களா அல்லது திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளா என எண்ணவேண்டியுள்ளது.

# புதிய அரசாங்கம் எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்கும்?

கவரொட்டிகள் மூலம் ஜே. வி.பி. யினர் ஜனாதிபதி பிரேமதாஸவின் அரசாங்கத்துக்கு ஆறுமாத கால 'அரசியல் ஆயுள்' தான்வழங்கியுள்ளனர்.

அண்மையில் தமது இயக்கத்தினர் மீது அரசுப் படைகள், குண்டர்கள், ஏவி விடப்பட்டிருக்கும் நிலையில் ஜே.வி.பி. யினர் இந்த ஆயுள் தண்டனையை நிறைவேற்ற முடியுமா என்பது ஒருபுறம் இருக்க, புதிய ஜனாதிபதி எவ்வளவு காலம் ஆட்சியில் நீடித்திருப்பார் என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் அடிபடத் தொடங்கியிருக்கிறது.

'இருபதாம் நூற்றாண்டின் நரி' என அரசியல் விமர்சகர்களால் வர்ணிக்கப்பட்டுள்ள பழைய ஜனாதிபதி ஜே.ஆர். மேற்தட்டு வர்க்கத்தைச் சார்ந்தவர். அவரது நடைமுறைகளும், அவர் கடைப்படித்த கொள்கைகளும், அவர் சார்ந்த வர்க்கத்தின் மேலாதிக்கத்தை மேலும் ஆழமாக வேரூன்றச் செய்யும் நோக்கத்துடனேயே, மேற்கொள்ளப்பட்டன. அவர் போட்ட 'முடிச்சுகளை' புதிய ஜனாதிபதி 'அவிழ்ப்பதில்' நேரத்தையும் மூளையையும் செலவிட வேண்டியிருக்கிறது.

பிரபல ஸ்கொட்டிஷ் கவிஞர் றொபேர்ட் பேர்னஸ் கூறியதுபோல, எலிகளும், மனிதர்களும் திட்டமிடுபவை ஒரு நொடியிலே சுக்குநூறாகலாம். வர்க்க அடிப்படையிலும் புதிய ஜனாதிபதி ஐ.தே.க. வின் பிரதிநிதியாக இருப்பதே விநோதம்.

காலமும், வரலாறும் எவருக்கும் நிலைத்து நிற்பதில்லை.

வாழைத் தோட்டத்தில் பிறந்து தன் முயற்சியால் முன்னேறிய ஒருவரின் கட்டுப்பாட்டினுள்தான் இன்று ஐ.தே.க. இருக்கிறது.

'கறுவாக்காட்டுக்காரர்' கறுவிக்கொண்டிருக்கலாம். வேறொன்றும் அவர்களால் இப்பொழுது செய்ய முடியாது.

ஆனால் புதிய ஜனாதிபதி ஐ. தே.க. வைத் தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார் என்று சொல்வதற்குமில்லை.

முதலியாரும், திசாநாயக்காவும் காற்று எப்பொழுது தம் பக்கம் வீசுமென எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அத்தகைய எதிர்பார்ப்பு உண்டு என்பதை புதிய ஜனாதிபதியும் அறிவார்.

புதிய ஜனாதிபதி 'நின்று பிடிப்பாரா' இல்லையா என்பது அவரது (வறுமை ஒழிப்பு) திட்டத்தில் தான் தங்கியுள்ளதென அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

பிரதமராக இருந்தபோது, பத்துலட்சம் வீடுகள் என்ற சுலோகத்தை முன்வைத்தார் இன்றைய ஜனாதிபதி.

அவர் சொன்ன இலக்களவிற்கு வீடுகள் கட்டப்பட்டபடவில்லை.

ஆனால் கட்டப்பட்ட அளவிற்கு, அவருக்கு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி.

இப்பொழுது அவர் கடைப்பிடிக்கும் வறுமை ஒழிப்புத் திட்டமோ உண்மையில் பழைய உணவு முத்திரைத் திட்டத்தை அறவே ஒழிப்பதை உள்நோக்கமாகக் கொண்ட திட்டமாகும்.

தனிப்பட்டவர்களுக்கல்ல, ஐந்து பேர்களைக் கொண்ட குடும்ப அணிகளுக்கே இந்த உதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஜனசவிய பிரேமதாஸவின் அரசியல் 'சாவுமணியாகவும் இருக்கலாம். —ஏனென்றால் எதிர்பார்த்த பலருக்கு உதவிகள் கிடைக்கமாட்டா.

## கருத்தரங்கு

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட 'பெண்களும் அபிவிருத்தி நோக்குகளும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று, வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் 25-3-89 (இன்று) காலை 8 மணிக்கு இடம் பெறுகிறது. கருத்தரங்கின் நோக்கம் பற்றி திருமதி சரோஜா சிவச்சந்திரன் உரையாற்றுவார்.

பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. சடாட்சர சண்முகதாஸ் "பெண்கள் அபிவிருத்திக்கான செயற்திட்டங்கள்" பற்றி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

மற்றும் பல்கலைக்கழகத் துணை விரிவுரையாளர் செல்வி சி. அம்பிகாவதி, மாதர் அபிவிருத்தி தலைவி ரி. பத்மாவதி வைத்திய கலாநிதி கௌரி நித்தியானந்தம் ஆகியோரும் பேசுவர்.

## புத்தளம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருந்த முஸ்லிம்கள் கூட இது பற்றிய பேச்சை எடுக்கவில்லை. அவ்வேளை எஸ். ஜே. வி. செல்வநாயகம் நாடாளுமன்றத்தில் இது பற்றி வன்மையாகக் கண்டித்தார்.

மீண்டும் முஸ்லிம்களுக்கு எதிராக காலியில் அசம்பாவிதங்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட போதும் இவை மௌனமாகவே மென்று விழுங்கப்பட்டன.

1915இல் முஸ்லிம்களுக்கும் சிங்கள இனத்துக்கும் இனக் கலவரம் மூண்ட போது, பொன்னம்பலம் இராமநாதன் நீதி நியாயம் பற்றிய கேள்வியின்றி சிங்களவரோடு அணி சேர்ந்த தவறை இன்றும் தமிழினம் அனுபவிக்க வேண்டிய நிலையிலுள்ளது.

இந்தப் போக்கு இப்படிக் கண்டிக்கப்படாமலேயே விடப்பட்டால் பேரினவாதத்தின் எதேச்சாதிகாரமான போக்கால் படிப்படியாக சிறுபான்மை இனங்கள் விழுங்கப்பட்டே போகலாம்.

தமது சிறுசிறு சலுகைகளுக்காகவும் பதவிகளுக்காகவும் இவைகள் பற்றி முஸ்லிம் தலைமைகள் இனிமேலும் மௌனம் சாதிக்குமா?

## மலிந்த 'பொப்' இசைகளுக்குத் தடை

இலங்கையின் கலாசாரத்துக்கு குந்தகம் செய்யும் விதத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இயங்கக் கூடாது என்ற வகையில், தகவல் அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா கட்டளையிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, மலிவான கலாசார சீரழிவுமிக்க "பொப்'' பாடல்கள், பாலியல் சம்பந்தப்பட்ட படங்கள் போன்றவை தடை செய்யப்பட வேண்டும் என்றும் அச் செய்தி கூறுகிறது.

இன்று ஜனாதிபதி வறுமையை ஒழிக்கும் முயற்சியாக 'ஜனசவிய' போன்ற விஷயங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது நாம் எமது மக்களின் மனதைப் பலப்படுத்தும் விஷயங்களில் கருத்தைச் செலுத்த வேண்டும் என்றும் திரு. ரணசிங்கா அவர்கள் கூறியுள்ளார்.

## பல்கலைக்கழக மாணவரின் கொடித்தினம்

அமைதிப்படையின் துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமான 'சத்தியேந்திரா (மருத்துவப்பீட முதலாம் ஆண்டு மாணவன்), ஜெகநாதன் (விஞ்ஞானபீட இரண்டாம் ஆண்டு மாணவன்) ஞாபகார்த்த அநாதைகள் நிதியம், என்ற பெயரில் கொடித்தினம் ஒன்றை, யாழ். பல்கலைச்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் 15-3-89 இல் நடாத்தியது.

அண்மைக்கால நிகழ்வுகளால் அனாதைகளானவர்களிற்கு உதவி செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிதியத்துக்கு, சுமார் ஐம்பதினாயிரம் ரூபா இதுவரை சேர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான இலகுவான நவீன கம்பியூட்டர் பயிற்சி
Computer Programming In dBASE III +

ஆரம்பம் : 2 / 4 / 89 ( சனி, ஞாயிறு வகுப்புகள் )
கட்டணம் : 1250 /= (பகுதி பகுதியாக செலுத்தலாம்)
பயிற்சிக்காலம்: 2 மாதம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
செய்முறைப் பயிற்சி IBM (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுநாள் :- 1 / 4 / 89

Unikco Computer Centre
No 5, Power House Rd
2nd Lane
Jaffna,
(Near Sub - Post Office)

## இலங்கை..-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களக் 'கிளர்ச்சியாளர்களான ஜே வி.பி. யினர் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டது.

அது பயங்கரமான கட்டவிழ்ப்பு; கதிர்காமத்தில் செல்வி மன்னம்பெரிக்கு நிகழ்ந்த கோரமான சாவையும், 10 000 க்கு மேற்பட்ட இளைஞர்களின் மரணத்தையும் நாம் எப்போதும் நினைவு கூர வேண்டும்.

இன்று தென்னிலங்கையில் மீண்டும் கிளர்ச்சி வெடித்திருக்கின்றது.

சீனாவின் உதவியை இலங்கை அரசு நாடியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன,

இன்றைய நிலையில்—இந்திய அமைதிப்படை நிலைகொண்டுள்ளநிலையில் — வேற்று நாட்டின், குறிப்பாக சீனாவின் உதவியை நாடுவது, இலங்கையை குருஷேத்ரப் போர்க்களமாக்குவதாகுமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## வெளிநாட்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது விலகியுள்ள தயான் ஜயதிலகா, அணிசேரா நாடுகளின் படையையே தருவிக்க வேண்டும் என்கிறார். எல்.ரி.ரி. ஈ. யினர் யு.என்.ஓ வின் படைகள் வரவேண்டும் என்று ஆரம்பத்திலிருந்தே கூறிவருகின்றனர். அரசாங்கமோ சீனாவின் படையை இங்கு வரவழைப்பதில் மும்முரமாக நிற்கிறதும் தெரிந்ததே.

* அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, லண்டன் போன்ற நாடுகளுக்கு செல்ல விரும்புகின்றவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

* தாய்வான் செல்ல விரும்புகின்றவர்களும் எம்மைத் தொடர்பு கொள்ளவும். சம்பளம் : 200 டொலர், 3 வருட ஒப்பந்தம்.

* பாஹ்ரேன் * குவைத்
* சவூதி போன்ற நாடுகளுக்கும் பயணங்கள் மேற்கொள்ளப்படும்.

இவை எல்லாவற்றிற்கும் நாடவேண்டியது

V. T. R. Travels
41, 3rd Cross Street
Jaffna

இப்பதிரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூசரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 25-3-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.